விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 29 வெள்ளிக்கிழமை (13.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 084

# ஒரு மாத காலத்தில் உள்நாட்டு விசாரணை

## ஜனாதிபதி தெரிவிப்பு



***(கொழும்பு)***

***இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து ஆராய உள்நாட்டு விசாரணை ஒன்றை இன்னும் சுமார் ஒரு மாதத்தில் அமைக்கலாம் என்று தான் நம்புவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார்.***

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமர் மோடிக்காக 5 ஆயிரம் பொலிஸார்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்பிற்காக 5 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 100 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இவ்வாறு கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் மோடி பல்வேறு இடங்களுக்கு விஜயம் செய்ய உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## விமானப்படை ஒத்திகை

(யாழ்ப்பாணம்)

இந்திய பிரதமர் மோடி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்வதற்கான பயண ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் மோடி உலங்குவானூர்தி மூலமே வருகைதரவுள்ளார்.

அதற்கான ஒத்திகையினை நேற்று பிற்பகல் இந்திய விமானப் படையினரும் இலங்கை விமானப் படையினரும் இணைந்து மேற்கொண்டிருந்தனர். இவ்வாறு உலங்குவானூர்தி மூலம் வருகைதரும் மோடி யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் இறங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பொலிஸாருக்கு புதிய பேச்சாளர்

(கொழும்பு)

புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரைகாலமும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண கொழும்பு வடக்கு பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக மாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே புதிய பொலிஸ் பேச்சாளராக ருவன் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார். (எ-11)

## மோடியைச் சந்திப்பார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை இலங்கை வரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்திப்பார் என எதிர்ப்பார்க்கப்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.ம.சு முன்னணியினரை சந்திக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி களமிறங்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கி வரும் நிலையில், குறித்த கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற சகல பங்காளிக் கட்சிகளின் தலைவர்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை சனிக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமூலம், நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கே இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஐ.ம.சு.முவைப் பலப்படுத்துவது தொட

23ஆம் பக்கம் பார்க்க....

## காரணமின்றி பிடிக்கப்பட்ட தமிழர்களை விடுவிக்கவேண்டும்

### சம்பந்தன் வேண்டுகோள்

(கொழும்பு)

காரணங்கள் எவையுமின்றி முன்னைய அரசினால் கைது செய்யப்பட்ட தமிழர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கோரியுள்ளார்.

கணவனை இழந்து, மூத்த இரு ஆண்பிள்ளைகளையும் போரின் போது பறிகொடுத்து, இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல்போன மூன்றாவது ஆண்பிள்ளையை மீட்டுத் தருமாறு கோரி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் ஆர்ப்பாட்டங்களில் தனது மகள் விபூஷிகாவுடன் சேர்ந்து கதறியழுது வந்த ஜெயக்குமாரியை மகிந்த அரசு கைது செய்து சிறையில் அடைத்தது.

குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்தப்படாமல் இருந்த இந்தப் பெண்ணை மைத்திரி அரசு பிணையில் விடுவித்துள்ளது. இதனை நாம் வரவேற்

23ஆம் பக்கம் பார்க்க....

# என்னை வீழ்த்துவதற்காக தூதரகங்கள் செயற்பட்டன

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

என்னை வீழ்த்துவதற்கு அமெரிக்காவும், இந்தியாவும் தங்களது தூதரகங்களை வெளிப்படையாகவே பயன்படுத்தின என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

சீனாவை தேவையற்ற விதத்தில உள்நாட்டு அரசியலுக்குள் இழுப்பதன் மூலமாக இலங்கையின் புதிய அரசாங்கம் இந்த நாட்டுக்கு அநீதியான விதத்தில் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"சௌத் சீனா மோர்னிங் போஸ்டி"ற்கு அளித்துள்ள பேட்டியில் இவ்வாறு மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். சீனா அளித்த உதவிகளுக்காக அவர்கள் அந்த நாட்டுக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். அதற்கு மாறாக இவர்கள் சீனாவை ஒரு குற்றவாளிபோன்று நடத்த முயல்கின்றனர். சீனாவை இது தனது நாட்டின் மீது மேற்கொள்ளப்படும்

24ஆம் பக்கம் பார்க்க....

## பிரச்சினைகளை தீர்க்கக் கோரி நாளை மௌனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் தீர்க்கப்படாமல் இருக்கும் மக்களின் பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுக்க வேண்டும் என்றும், இந்திய அரசினால் நேரடியாக தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை தீர்க்க கோரியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியான தீர்வை பெற்றுத்தர விரைந்து நடவடிக்கையை இந்திய பிரதமர் நரேந்திர மோடி எடுக்க வேண்டும் என கோரி மௌன போராட்டம் ஒன்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்றைய தினம் இலங்கைக்கு வருகைதரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி நாளைய தினம் யாழ்ப்பாணத்திற்கும் வருகைதரவுள்ளார். இந் நிலையில் மேற்படி மௌன ஆர்ப்பாட்டமும் நாளை சனிக்கிழமை பதினொரு மணிய

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் அரசியல் தலைவர்களை நாளை சந்திக்கிறார் மோடி

(கொழும்பு)

இலங்கை வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, தென்னிலங்கை, மலையக தமிழ் அரசியல் தலைவர்களை சனிக்கிழமை மாலை கொழும்பில் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது. இச்சந்திப்பில்,

ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன், தொழிலாளர் தேசிய சங்க தலைவரும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணி தலைவரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான ராதாகிருஷ்ணன் மற்றும் பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் வேலாயுதம் ஆகியோர் பங்குபற்றுவர்.

இந்த சந்திப்பு தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கூறியதாவது,

இலங்கையில் புதிய அரசு பதவியேற்றுள்ளது. இந்தியாவிலும் புதிய அரசு ஆட்சியில் உள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

# இன்று இலங்கை வரும் மோடி நாளை வடக்கிற்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கை-இந்திய நாடுகளுக்கிடையிலான சிநேகபூர்வ உறவுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்திய பிரதமரின விஜயத்தின்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு மொரிஷியஸ் பயணமாகியுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி இன்று இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

இந்திய குடியரசின் 15ஆவது பிரதமரான நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு இலங்கையில் பல்வேறு மட்டத்திலான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி மாளிகையில் பிரதமர்

23ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# JAFFNA MEDICAL ASSOCIATION
# ANNUAL GENERAL MEETING 2015
## NOTICE OF MEETING

Notice is hereby given that the **Annual General Meeting (AGM)** of the **Jaffna Medical Association** will be held on Saturday **23rd May 2015 at 11.00Am of the Lecture hall of Nursing Training School, Jaffna**, for the following Purposes;

1. To Receive and consider the Annual Report of the Committee of Management on the affairs of the Company and the Statement of Accounts for the year ended 31st December 2014 and the Report of the Auditors thereon
2. To Consider any resolutions proposed by members and committee where due Notice has been given
3. To Consider any other Matters where due notice has been given
4. To Elect the Committee of Management for year 2015/16.
5. To Appoint the Auditors of the Association and to Authorize the Committee of Management todetermine their remuneration.

**Members are requested to propose any resolution on or before 21st of March 2015 in order to in co-operate in the agenda of the AGM.**
By order of the Committee of Management,
**Hony. Secretary.** 13th March 2015

(9770)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப் படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

1. கல்வியியல் முதுமாணி - 2015/16 (அணி IV) வவுனியா பிராந்திய நிலையம்
2. முதுகலைமாணி - சைவசித்தாந்தம 2015/16 (அணி V)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிட மிருந்து கோரப்படுகின்றன.

### கல்வியியல் முதுமாணி

**அனுமதிக்குரிய தகைமைகள**

➢ "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்"

அத்துடன்

➢ ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம்.

**தெரிவு முறைமை:**
எழுத்துத் தேர்வும் , நேர்முகத் தேர்வும்
(எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்.)

கற்கைக் காலம்: ஒரு வருடம்
மொழி மூலம் : தமிழ்
கற்கைநெறிக் கட்டணம் : 75,000/-
விண்ணப்பப் படிவக் கட்டணம்: 1,000/-

### முதுகலைமாணி - சைவசித்தாந்தம் 2015/16 (அணி V)

**அனுமதிக்குரிய தகைமைகள்:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒரு கற்கைநெறியில் பட்டம்
குறிப்பு:- பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகைமைகளும் அனுபவமும் பரீட்சிக்கப்படலாம்.

கற்கை நெறிக் காலம்: ஒரு வருடம்
மொழி மூலம்: தமிழ்
தெரிவு முறைமை: நேர்முகத்தேர்வு
கற்கை நெறிக்கட்டணம்: 75,000/-
விண்ணப்பப் படிவக் கட்டணம்:1,000/-

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு கட்டணத்தை செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்ப படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் www.jfn.ac.lk/grad எனும் பல்கலைக் கழக வலைதளவசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளமூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை/ மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 20.04.2015 ஆம் திகதிக்குமுன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:- கல்வியியல் முதுமாணிக்குரிய விண்ணப்பப்படிவங்களை வவுனியா வளாக முதல்வர் அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கியில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பப்படிவக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலமும் விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கல்வியியல் முதுமாணி" எனக்குறிப்பிட்டு வளாக முதல்வர் வவுனியா வளாகம் என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
10.03.2015

(C-348)


# மகிந்தவின் வருகையை விரும்பாத உறுப்பினர்கள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராபஜகஷவின் வருகையை சில சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் வரும்பவில்லை என சுதந்திரமுன்னணிக் கட்சியன் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

எதிர்வரும்பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதனை சில சுதந்திரக கட்சியின்முக்கிய தலைவர்கள்விரும்பவில்லை என அவர் குற்றம்சுமத தியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவும் இதனை விரும்ப வில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஏனெனில், மைத்திரிபால சிறிசேனவை விடவும் மகிந்த ராஜபக்ஷவிற்கு அதிகளவு வாக்குப் பலம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம போலி வாக்குறுதிகளை அளித்த போதிலும், மகிந்தவின் வாக்கு பலம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மறறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் ஆதரவுடனேயே மைத்திரி பால சிறிசேன வெற்றியீட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

மிகக் குறைந்தளவான சுதந்திரக் கட்சி உறுப்பினர்களே மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்
## கிளி/பூநகரி மத்திய கல்லூரி

மேற்படி கூட்டம் 15.03.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது. சகல பழைய மாணவர்களும் அங்கத்தவர்களாக இணைந்து கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அதிபர்,
கிளி/பூநகரி மத்திய கல்லூரி,பூநகரி.

(C-347)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.எப்.எக்ஸ் அன்ரன்**
**SLPS-1, BA (Hons), PGDE, M.A (R.P1-Merit), M Phil, N.C.Eng)**
(அதிபர், யாழ்.நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்
தலைவர், யாழ் கோட்ட அதிபர்கள் சங்கம்)

எமது பாடசாலை அதிபர்
திரு எப்.எக்ஸ் அன்ரன் அவர்கள்
2008.07.02 முதல் இலங்கை
அதிபர் சேவையின் I-ம் தரத்திற்கு
பதவியுயர்வு பெற்றமைக்கு பாராட்டு
வதுடன் அவர் பணி சிறக்கவும்
மேலும் பல பதவி உயர்வுகளையும்
பெற்று பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், கல்விசார ஊழியர்,
யாழ் / நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

(9769)



## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**அருளானந்தம் திரேசம்மா**



'இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம்.
ஆகவே நீ எனக்கே சொந்தம்'
(எசாயா 43:1)

மலர்வு 23.11.1935
உதிர்வு 15.03.2014

அன்பின் நிறைகுடமே அம்மா
பாசத்திலும், பண்பிலும் இனிய தாயே
எங்கள் வீட்டின் ஒளிவிளக்கே
பாசத்துடன் நடமாடிய எம் தெய்வமே

தரணியில் எம்மை உயரவைத்து
இன்பமுடன் நாம் வாழ வழிகாட்டி
குருமகனை மகிழ்வாக பெற்றுக் கொடுத்து
இப்போ எம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு

நீர் சென்று ஓராண்டு ஆனதம்மா
இவ்வளவு சீக்கிரம் உம் பிரிவு வருமென்று
எண்ணவில்லை நாம்
பல்லாண்டுகாலம் இப்பாரினில்
வாழ்வீர் என்று
பல கனவுகள் கண்டோமம்மா
இன்பத்திலும் துன்பத்திலும்
ஆறுதல் நீரம்மா

எத்தனை ஆண்டு தான் சென்றாலும்
அம்மா, அம்மா என்றழைக்கும்
எம் உதடுகள் என்றென்றும் ஓயாது
பாசமுள்ள மனைவியாகவும்
அன்புத் தாயாகவும்
ஆதரவான மாமியாராகவும்
அரவணைப்பான பேர்த்தியாகவும்
என்றென்றும் எம் மனதில் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்



இவரது ஆன்ம இளைப்பாற்றி க்காக யாழ்.சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் 14.03.2015 (சனிக்கிழமை), காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்

**36/2,
ரெம்பிள் றோட்
யாழ்ப்பாணம்.**

அன்பு நினைவுகளுடன் :
கணவர், உடன் பிறப்புக்கள்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(9762)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் அமைதியான சூழல் வரும்வரை தமிழர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது!

## கவிஞர் காசி ஆனந்தன் வலியுறுத்து

ஈழ மண்ணில் அமைதியான சூழல் வரும் வரை தமிழர்களை திருப்பி அனுப்பக் கூடாது என கவிஞர் காசி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.


ஈழத் தமிழ் கவிஞர்களில் முதன்மையானவர் கவிஞர் காசி ஆனந்தன். ஈழ மக்களின் வாழ்வியல் போராட்டங்களை உணர்வு ததும்பும் கவிதைகளாக இன்றளவும் பதிவு செய்து வருபவர். இந்திய ஈழத் தமிழர் நட்புறவு மையத்தின் தலைவராக இருக்கும் இவர், போரின் தாக்குதலால் தனது உறவுகளைப் பிரிந்து, 20 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் வாழ்ந்து வருகிறார். பிரதமர் மோடி இலங்கை பயணம் மேற்கொண்டிருக்கும் சூழலில் ஈழத்தமிழ் மக்களின் நிலை குறித்து அவருடன் தமிழகத்திலுள்ள ஊடகம் ஒன்று நடத்திய கலந்துரையாடலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**கேள்வி:** இன்றைய சூழலில் இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் வாழ்வாதாரம் எந்த நிலையில் உள்ளது?

**பதில்:** போருக்குப் பின்னர் தமிழீழ மக்களின வாழ்க்கை சீரழிந்து போயிருக்கிறது. சிதைந்து நொறுங்கிப் போயிருக்கிறது. அன்றாட உணவுக்கும் வழியற்றவர்களாய் பெரும்பாலான ஏழை மக்கள் உள்ளனர். இவர்களெல்லாம் ஒரு காலத்தில் வசதியாக வாழ்ந்தவர்கள். அவர்களின் வீடுகள் குண்டுவீச்சில் தகர்ந்துபோயின. பிச்சை எடுப்பது வெட்கமென்று கருதும் தமிழீழ மக்கள், பிச்சை எடுக்க முடியாத நிலையில் இன்றைக்குத் தவிக்கிறார்கள்.

**கேள்வி:-** 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உதவும் என்று எதிர்பார்க்கலாமா?

**பதில்:** தமிழர்கள் தேடும் விடுதலைக்கும் 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்த சட்டத் திருத்தம் பயனற்றது என்று தொடக்கம் முதலே கூறி வருகிறோம். அதிகாரம் எதுவுமற்ற ஓர் அலுவலகம், அதுதான்



மாகாண சபை. சிங்கள ஆட்சியரால் நியமிக்கப்பட்ட ஆளுநரே அதிகாரமிக்க வராக இருக்கிறார். மக்களால் தேர்வு செய்யப்பட்ட முதல்வர் வெறும் தலையாட்டியாகயிருக்கிறார்.

மாகாண சபைக்கு ஒருபோதும் பொலிஸ் அதிகாரம் தரமுடியாது என்றும், 'வடக்கு மாகாண சபை முதல்வர் விக்னேஸ்வரன் ஒரு பொய்யர். அவருடன் ஒருநாளும் பேச மாட்டேன்' என்றும் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திமிரோடு சொல்லியிருக்கிறார். ஒரு நாட்டின் தலைமை அமைச்சருக்கும், அந்த அரசின் கீழுள்ள மாகாணமுதல்வருக்கும்இடையே உள்ள உறவு இதுதான் என்றால் மாகாண சபை எப்படி இயங்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

**கேள்வி:** இலங்கை வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் தமிழர்கள் வாழ்விலும் மாற்றத்தைத் தருமா?

**பதில்:** சென்னைக்கு வந்திருந்த வட மாகாண முதல்வர் விக்னேஸ்வரனே, மாகாண சபையால் தமிழர்களின் சிக்கலைத் தீர்க்க முடியாது என்று ஒப்புக் கொண்டார். ஒற்றை ஆட்சிமாற்றம் ஒன்றே தமிழர்களுக்கு முழுமையான விடுதலையையும் அமைதியான வாழ்வையும் தரும் என்று அவர் சொன்னார். அவருடைய இந்தக் கருத்துக்கு நானும் உடன்படுகிறேன்.

**கேள்வி:** இப்போதுள்ள நிலையில் இந்திய அரசு செய்ய வேண்டியவையாக நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

**பதில்:** இந்திய நலன்களை காப்பதற்காக கடந்த காலங்களில் தமிழ்ஈழ மக்களுக்கு எதிரான, சிங்கள ஆட்சியாளர்களுக்கு சார்பான முடிவுகளையே தொடர்ந்து இந்திய அரசு எடுத்து வந்திருக்கிறது. சிங்களவருக்கு ஆதர வாகவே அமைதிப்படை களமிறங்கியது. ஒன்றரை இலட்சம் தமிழர்கள் துடிக்கத் துடிக்க சாகடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் போரிலும் சிங்கள அரசுக்கு சார்பாகவே செயற்பட்டது. ஆனால், இத்தனை நிகழ்வுக்கு பிறகும் இன்றும் எங்களோடு இந்திய அரசு நிற்க வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் தமிழீழ மக்கள் உரிமையோடு முன்வைக்கிறார்கள். ஏனென்றால், சிங்களவர்கள் இன அழிப்பு செய்தவர்கள். நாங்கள் அழிவின் விளிம்புக்கு தள்ளப்பட்டவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


### வீடு, காணி விற்பனைக்கு

கனால் வீதி, மாதகலில் வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.

காளி கோயிலடி மூளாயில் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
077 044 6475

(9765)



### விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கட்டடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 873 6561

(9733)


### உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ். பிராந்திய அலுவலகத்தின் அறிவித்தல்

உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ். பிராந்திய அலுவலகம் வீரசிங்கம் கட்டடம், 3 ஆம் மாடியில் அமைந்துள்ளதால் வரி செலுத்துனர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றார்கள்.

இதனால் அலுவலக தேவைக்காக 5000 சதுர அடி கொண்ட புதிய கட்டடம் வாடகைக்கு பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விண்ணப்பிக்க விருப்பம் உள்ளோர் மேலதிக விபரங்களுக்கு நேரடியாகவோ அல்லது 021 222 2076 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ 20.03.2015 ஆம் திகதிக்கு முன்னதாக தொடர்பு கொள்ளுமாறு உதவி ஆணையாளர் திருமதி. சு.சர்வேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)


# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)
2. அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்) (வெளிக்களம் / உட்களம்)
3. முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலாரும்)
4. கணனி இயக்குநர்கள்
   - தமிழ் ரைப்பிங்
   - பக்க வடிவமைப்பு
   - விளம்பர வடிவமைப்பு

**தகைமை**

க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி துறைசார் பயிற்சியும் உள்ளவர்கள் தமது தொலைபேசி இலக்கம், முகவரி உள்ளிட்டதான சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 16.03.2015ஆம் திகதிக்கு முன்னதாக

வலம்புரி இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

யாழ் நகரைஅணமித்தவர்கள் விரும்பத்தக்கது.



### பெயர் மாற்றம்

82/2D, பலாலி றோட், உரும்பிராய் மேற்கு, உரும்பிராயில் வசிக்கும் திருஞானஈஸ்வரி (Thirugnana Ishwary) ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை திருஞானேஸ்வரி (Thirugnaneswary) என பெயர் மாற்றிக் கொள்கின்றேன். இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வாழ்மக்களுக்கு இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

உண்மையுள்ள
திருஞானேஸ்வரி

(9767)


## இராசி பலன்

13.03.2015
மாசி 29, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
சப்தமி காலை 7.08 மணிவரை
அட்டமி பின்னிரவு 6.16 மணிவரை
கேட்டை முன்னிரவு 9.13 மணிவரை
இராகுகாலம் 10.52-12.22 மணிவரை
சுபநேரம் 6.22-7.52 மணிவரை

வளவன்

**மீனம்:** எடுத்த காரியத்தில் சீரப் பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**மேடம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தேவையற்ற செலவுகள் அதிகரிக்கும், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**இடபம்:** மனோதைரியம்கூடும், செல்வாக்கான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், சத்துரு ஜெயமுண்டு, முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், இஷ்ட சித்தியுண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, அஜீரணம் சம்பந்தப்பட்ட ரோகங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். வழிபாட்டால் மகிழ்ச்சிகூடும், காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், சயன சுகமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயன சுகமுண்டு, ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், மாதர் நட்புண்டு.

**துலாம்:** போசன சுகக் குறைவுகள் இடம்பெறலாம், மனச்சங்கடங்கள் ஏற்படலாம், எடுத்த முயற்சிகளை நிறைவேற்றுவதில் சில சிரமங்களை எதிர்கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** மனோ தைரியம்கூடும், மாதர் நட்புண்டு, பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் கைகூடும் நாள், பொது வாழ்வில் புகழ்கூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



12.03.2015 இல் பளையில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் தோட்டத்தில், மைற்றினை கட்டுப்படுத்தும் உயிரினவியல் கட்டுப்பாட்டு முறையாக நியூசிலஸ் பராக்கி எனும் இரை கௌவியினை தென்னந்தோட்டத்தில் எப்படி விடுவிப்பது என்பதனை செயல் விளக்க ரீதியாக கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் விளக்கமளிப்பதனைக் காணலாம்.



மைற்றினை இரையாக உட்கொள்ளும் பராக்கி எனும் இரை கௌவியினை தென்னை மரத்தில் எப்படி விடுவிப்பது என்பதனை படத்தில் காணலாம்.



இந் நிகழ்வில் கலந்து கொண்ட ஒருபகுதியினரைக் காணலாம்.

# ஆவணங்களை ஒப்படைக்க ஜெயக்குமாரி கோரிக்கை

(கொழும்பு)

பிணையில் விடுதலை செய்யப்பட்ட ஜெயக்குமாரி தான் கைது செய்யப்பட்ட போது எடுத்துக்கொண்ட அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை தன்னிடம் ஒப்படைக்குமாறு கொழும்பு நீதிமன்றத்திடம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கமைய விசாரணைக்கு குறித்த விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மகாதேவா ஆச்சிரமத்தில் உள்ள ஜெயககுமாரியின் மகள் விபூஷிகாவை தாயுடன் சேர்ப்பது தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் ஜெயக்குமாரி கிளிநொச்சிக்கு வருகை தந்த பின்னரே நீதிமன்றின் ஊடாக விபூஷிகா விடுதலை செய்யப்படுவார் என்று கண்டாவளை பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸாரால் எடுக்கப்பட்ட ஆவணங்களை மீள கையளித்த பின்னர் தான் ஓமந்தை சோதனைச் சாவடியில் இருந்து கிளிநொச்சிக்கு வரமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பிரதமருக்கு அழைப்பாணை

(கொழும்பு) ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல்



மனு தொடர்பில் பரிசீலனை செய்த உச்ச நீதிமன்றம் இந்த அழைப்பாணை உத்தரவினை பிறப்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டமைக்கு எதிராக அத்தநாயக்க மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு எதிர்வரும் 19-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

இந்த தினத்தில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ-11)

# தமிழக மீனவர்கள் மீது பெற்றோல் குண்டு வீச்சு

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் தமிழக மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச சென்ற மீனவர்கள் மீது, இலங்கை கடற்படையினர் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில், தங்கச்சிமடத்தை சேர்நத ஆரோக்கியதாஸ் என்பவருக்கு சொந்தமான படகு தீப்பற்றி எரிந்துள்ளது. உடனடியாக அந்த படகில் இருந்த மீனவர்கள், கடல்நீரை கொணடு படகில் ஏற்பட்ட தீயை அணைத்துள்ளனர்.

இந்த தாக்குதலில் பயந்துபோன தமிழக மீனவர்கள், உடனடியாக அங்கிருந்து கிளம்பி நேற்றுக் காலை இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர்.

மேலும், இதுகுறித்து படகின் உரிமையாளர் தமிழக மீன் துறையிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பிரதமர் மோடி இன்று இலங்கை செல்ல உள்ள நிலையில், தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தி இருப்பது தமிழக மீனவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-11)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 161

## பயத்தை எதிர்கொள்ளல்

உறவுகளில் நியாயமாக நடந்து கொள்ளுதல் என்ற வார்த்தை வருவதற்குக் காரணம், நீங்கள் எப்பொழுதும் மற்றவர்களுக்காக வாழ வேண்டும், அவர்களது தேவைகளையும் ஆசைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும், என்றே எப்பொழுதும் உங்களுக்கும் கற்றுக் கொடுக்கப்படுவதுதான்.

நீங்கள் எப்பொழுதும் இது போன்ற விடயங்களைச் செய்து, உறவுகளிடம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டிய தேவையை உணருகிறீர்கள். மேலும் இவைகளைச் செய்யவில்லையென்றால் நீங்கள் ஒரு குற்றவுணர்வு மற்றும் பயச்சூழலில் சிக்கிக்கொள்கிறீர்கள். நீங்கள் சமூகத்தின் முழுச் செயற்பாடு பற்றிய ஆழமான தெளிவுடன் வெறுமனே முழுமையாக வாழ்ந்தால் இதுபோன்ற நிர்ப்பந்தங்களின் பிடியில் ஒருபோதும் சிக்கிக் கொள்ள மாட்டீர்கள்.

நீங்கள் உறவுகளில் அன்பை இழக்காமல் முழு நிறைவுடன் வாழ முடியும். எப்பொழுதும் உடலளவிலான பிரிவைப் பற்றிய பயத்திற்குக் காரணம் அந்த உறவைப் பொறுத்த வரையிலான குற்ற உணர்வே.

நீங்கள் உறவில் ஒரு வர்த்தக முறையைப் போல் அல்லாமல் மற்றவரை நோக்கிய துய அன்பின் ஆற்றலுடன் முழுமையாக வாழ்வீர்களானால் குற்றவுணர்விற்கோ அல்லது பயத் திற்கோ இடமிருக்காது. அந்த மனிதர் மறைந்துவிட்டால்கூட உங்களிடம் அவரை நோக்கிய அன்பு தொடர்ந்து இருக்கும். அவ்வளவுதான். ஒருபோதும் பிரிவைப்



பற்றிய பயம் இருக்காது.

நீங்கள் அந்த மனிதருடன் வாழும் பொழுதும் மிகுந்த தெளிவுடனும் விழிப்புணர்வுடனும் வாழ முயற்சி செய்யுங்கள். பல சமயங்களில் உறவுகளில் துன்பத்திற்குக் காரணம் பாதுகாப்பற்ற உணர்வும், எப்பொழுதும் இழையோடிக் கொண்டிருக்கும் ஒருவரையொருவர் இழந்துவிடுவோமோ என்ற அச்சமும்தான். எந்த உறவிலும் உள்ள பயத்தை ஆழமாக ஆராய்ந்தீர்களானால் நமது உறவுகள் ஏதோ ஒரு வகையில் வர்த்தகப் பரிவர்த்தனையைப் போல் ஆகிவிட்டது தான், இந்த பயத்திற்குக் காரணம் என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.

ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் மற்றவர் திருமணத் திற்கு வெளியே வேறு யாரையாவது தேடிக் கொண்டு விடுவாரோ என்ற பயம். தாய்க்கும் மகனுக்கும் இடையில் மகன் தாயை விட மனைவிக்கு அதிக கவனம் செலுத்த ஆரம்பித்துவிடுவானோ என்ற பயம். தந்தைக்கும் மகனுக்கும் இடையில் தந்தை சொத்துக்களை மகனுக்குக் கொடுக்காமல் போய் விடுவாரோ என்ற பயம் அல்லது மகன் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றாமல் போய்விடுவானோ என்ற பயம்.

இதுபோன்று எந்த உறவிலும் திருப்திப்படுத்தப்பட வேண்டிய மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய, ஒரு அடிப்படையான எதிர்பார்ப்பு இருக்கிறது. இதுவே பயத்திற்குக் காரணம்.

நான் சொல்கிறேன்.... உங்களால் எந்த உறவையும் ஒருபோதும் முழுமையாகத் திருப்திப்படுத்த முடியாது. குடும்பத்தினர் அனைவரையும் திருப்திப்படுத்த முயலும் எவருமே இறுதியில் அதை விட்டு விட்டு ஓடிவிடுவர்!

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 86 இந்திய மீனவர்களையும் விடுவிக்க இலங். அரசு முடிவு

**(கொழும்பு)**

**இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 86 இந்திய மீனவர்களையும் விடுவிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.**

இந்திய பிரதமர் இன்று இலங்கை வரவுள்ள நிலையிலேயே இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர் என ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இந்திய கடல் எல்லையை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர்கள் அண்மையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதன்படி 67 காரைக்கால் மீனவர்களும், 19 நாகை மீனவர்களும் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இம் மீனவர்களே விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர் என ஜனாதிபதி ஊடக பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

# சேவை நலன் பாராட்டும் மணி விழாவும்

Happy Birthday 60

## திருமதி தெய்வநாயகி கந்தசாமி

(Tamil Trained. SLTS-I உப அதிபர்)



எமது பாடசாலையில் சிறந்த ஆசானாகவும் உப அதிபராகவும் சேவையாற்றி 13.03.2015 இன்று ஓய்வு பெறும் ஆசிரியைக்கு அறுபதாவது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவர் சகல நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**மு/சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை.**
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

1088

## அறிவுப் பானை

வீரசிம்மன் ஒரு குறுநில மன்னர்! சிற்றரசராக இருந்த அவர் அக்பருடைய ஆதிக்கத்தில் இருந்தார்.

மொகலாய சாம்ராஜ்யத்திற்கு கப்பம் செலுத்தி, அவர்களுடன் நட்புறவோடிருந்தார்.

தனது ராஜ்யத்தில் குடிமக்களின் நிம்மதியையே பெரிதாக மதித்த வீரசிம்மன், மொகலாயர்களின் அடிமையாக இருந்ததைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால், அவருடைய ராஜ்யத்தில் இருந்த சில இளைஞர்கள் மன்னர் தன்மானத்தை அடகுவைத்து விட்டதாகக் கருதினர்.

அந்த இளைஞர்கள் தயக்கமின்றி அவரை அணுகி அவருடைய கொள்கைக்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

சுதந்திரம் தங்களுடைய பிறப்புரிமை என்றும், நாட்டின் அமைதிக்காக, மொகலாயர்களின் அடிமைகளாகத் திகழ்வது அவமானம் என்றும் தங்கள் கருத்தை வெளிப்படுத்தினர்.

அதற்கு வீரசிம்மன், "நானும் சுதந்திரத்தை விரும்புகிறேன். ஆனால் அதைப் பெறுவதற்காக, இரத்த ஆறு ஓடுவதை நான் விரும்பவில்லை.

மொகலாயர்கள் மிகப்பலம் பொருந்தியவர்கள். அவர்களுடைய படைப்பலத்திற்கு முன் குறுநில மன்னனாகிய என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்றார்.



அதற்கு அவர்கள் "படைப்பலத்தை மட்டும் ஏன் ஒப்பிடுகிறீர்கள்? நம்முடைய அறிவினால் மொகலாயர்களை வெற்றி கொள்ள முடியாதா?" என்றனர். "நம்மிடம் அத்தகைய அறிஞர்கள் இருக்கிறார்களா?" என்றார் வீரசிம்மன்.

"ஏன் இல்லாமல்?" என்றனர் இளைஞர்கள்.

"ஒன்று தெரிந்து கொள்ளுங்கள்! அக்பரின் சபையில் உள்ள அறிஞர்களைப் போல் வேறு எங்குமே காண முடியாது" என்றார்.

"அவர்களுடைய அறிவுத்திறமையை சோதித்துப் பார்த்து விடலாமே!" என்று சவால்விட்ட ஓர் இளைஞன் "நான் ஒரு சோதனை சொல்கிறேன். நீங்கள் அக்பரிடம் அவருடைய தர்பாரிலிருந்து அறிவு நிரம்பிய ஒரு பானையை அனுப்பச் சொல்லி வேண்டுங்கள்" என்றான். "அறிவு நிரம்பிய பானையா? அது ஏன்? தண்ணீரைப் பிடிப்பது போல் பானையில் அறிவை நிரப்ப முடியுமா?" என்று கேட்டார் மன்னர்.

"அது இயலாது என்று நினைக்கிறீர்களா?" என்றான் அவன்.

"ஆம்! அது முடியாத ஒன்று!" என்றார் மன்னர்.

"இயலாததை செய்து முடிப்பவன்தான் அறிவாளி! அக்பரின் தர்பாரில் உலகிலேயே சிறந்த அறிவாளிகள் உள்ளனர் என்று சொன்னீர்களே! அத்தகைய தலைசிறந்த அறிவாளிகள் நாங்கள் கேட்டதை செய்யட்டுமே!" என்று திமிராகக் கேட்டான் அவன். மன்னரும் வேறு வழியின்றி அதற்கு ஒப்புக் கொண்டார்.

சில நாட்கள் கழித்து, வீரசிம்மன் நன்கு பேசவல்ல ஒரு தூதனை கை நிறைய வெகுமதிகளுடன் அக்பரிடம் அனுப்பினார்.

வீரசிம்மனின் தூதன் அக்பரின் தர்பாரில் நுழைந்து அவரை வணங்கிவிட்டு, தனது மன்னர் கொடுத்தனுப்பியிருந்த வெகுமதிகளை அக்பரிடம் சமர்ப்பித்துவிட்டு, மன்னரின் வாழ்த்துகளையும் தெரிவித்தான்.

"வீரசிம்மன் நலமாக இருக்கிறாரா?" என்று அக்பர் வினவினார். "சக்கரவர்த்தியின் தயவு இருக்கும் போது எங்கள் மன்னரின் நலத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமா!" என்றான் தூதன் பணிவுடன்.

"உங்கள் மன்னருக்கு என் வாழ்த்துகளைத் தெரிவிப்பாய்!" என்ற அக்பர், "மன்னரிடமிருந்து எனக்கு ஏதாவது செய்தி உண்டா?" என்று கேட்டார். "பிரபு! உங்கள் தர்பாரில் பல அறிஞர்கள் நிறைந்துள்ளனர். அதனால் அறிவு நிரம்பிய ஒரு பானையை தயவு செய்து நீங்கள் கொடுத்தருளும்படி எங்கள் மன்னர் வேண்டிக் கொள்கிறார்" என்றான் தூதன். அதைக் கேட்டு தர்பாரில் இருந்தவர் வியப்படைந்தனர்.

அறிவை எப்படிப் பானையிலிட்டு நிரப்ப முடியும்? ஆனால் அக்பர் அதைப் பற்றி தீவிரமாக சிந்திக்கவில்லை. தன் தர்பாரில் ஏராளமான அறிஞர்கள் இருக்கையில், இந்த விடயத்தை அவரகளே கவனித்துக் கொள்வார்கள் என்று விட்டுவிட்டார். அதனால் அவர் வீரசிம்மன் விரும்பிய பொருள் ஒரு மாதத்திற்குள் அனுப்பப்படும் என்று தூதனிடம் சொன்னார்.

"பிரபு! உங்கள் கருணைக்கு எல்லையே இல்லை! உங்களுடைய ஆதிக்கத்திலிருப்பதை எண்ணி எங்கள் மன்னர் பெருமைப்படுகிறார்" என்று தூதனும் சாமர்த்தியமாக அக்பர் மனம் குளிரும்படி பேசிவிட்டு, திரும்பிச் சென்றான்.

அவன் சென்ற பிறகு, அக்பர் தன் தர்பாரிலிருந்த அறிஞர்களை நோக்க அவர்களுள் ஒருவர் "பிரபு! வீரசிம்மன் கேட்டிருப்பதை கொடுக்க முடியவே முடியாது" என்றார். "முடியாதது என்று ஒன்றுமே கிடையாது. அதைக் கொடுத்தே ஆக வேண்டும்" என்று அக்பர் கோபத்துடன் கூறியதும், அனைவரும் பயத்தினால் ஒன்றும் பேசாமல் இருந்து விட்டனர்.

"பிரபு!" என்று மெதுவாக அழைத்தவாறே எழுந்த பீர்பால், "எனக்கு ஒரு பதினைந்து நாட்கள் அவகாசம் கொடுங்கள். இந்த சவாலை நான் சமாளிக்கிறேன்" என்றார்.... (தொடரும்)

03.2015
13

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1639 - ஹாவர்ட் பல்கலைக்கழகத்துக்கு சமயவாதி ஜோன் ஹவார்ட் என்பவரின் பெயர் இடப்பட்டது.
- 1781 - வில்லியம் ஹேர்ச்செல் யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்தார்.
- 1811 - பிரித்தானியர் பிரெஞ்சுப் படைகளை லீசா என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்தனர்.
- 1881 - ரஷ்யாவின் சார் மன்னன் இரண்டாம் அலெக்சாண்டர் தனது மாளிகைக்கு அருகில் நடந்த குண்டு வீச்சில் கொலை செய்யப்பட்டான்.
- 1900 - பிரான்சில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் வேலை நேரம் சட்டப்படி 11 மணி நேரமாகக் குறைக்கப்பட்டது.
- 1908 - நெல்லைக்கு வந்த வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, பத்மநாப அய்யங்கார் கைது செய்யப்பட்டதால் திருநெல்வேலியில் எழுச்சி ஏற்பட்டது.
- 1921 - மொங்கோலியா சீனாவிடம் இருந்து தனது விடுதலையை அறிவித்தது.
- 1940 - இந்திய விடுதலைப் போராட்ட வீரர் உத்தம் சிங லண்டனில் காக்ஸ்டன் ஹால் என்ற இடத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் வைத்து இந்தியாவின் முன்னாள் ஆளுநர் மைக்கேல் டயர் என்பவரை சுட்டுக் கொன்றார்.
- 1943 - ஜேர்மனியப் படைகள் போலந்தின் யூதக் குடியேற்றங்களை அழித்தனர்.
- 1954 - வியட்நாம் போர்: வியட் மின் படைகள் பிரெஞ்சுப் படைகளைத் தாக்கினர்.
- 1957 - கியூபா ஜனாதிபதி புல்ஜென்சியோ பட்டீஸ்டாவைக் கொல்ல மாணவ தீவிரவாதிகள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.
- 1969 - அப்பல்லோ 9 விண்கலம் பாதுகாப்பாக பூமி திரும்பியது
- 1979 - கிரெனடாவில் இடம்பெற்ற புரட்சி ஒன்றில் அதன பிரதமர் எரிக் கெய்ரி பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1996 - ஸ்கொட்லாந்து, டன்பிளேன் நகரில் இடம்பெற்ற சூட்டு நிகழ்வில் 16 மாணவர்களும் ஓர் ஆசிரியரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொலையாளி தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.
- 1997 - அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரின் மீது பீனிக்ஸ் வெளிச்சங்கள் தெரிந்தன.
- 2003 - இத்தாலியில் 350,000-ஆண்டு பழமையான மனித அடிச்சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக நேச்சர் இதழ் அறிவித்தது.
- 2007 - 2007 உலகக்கோப்பை துடுப்பாட்டம் (கிரிக்கெட்) போட்டிகள் மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பம்.

### பிறப்புக்கள்

- **1733 - ஜோசப் பிரீஸ்ட்லி, ஆக்ஸிஜனைக் கண்டுபிடித்தவர் (இ. 1804)**
- 1839 - ஜாம்ஷெட்ஜி டாடா, இந்தியாவின் நவீன தொழில்துறையின் முன்னோடி (இ. 1904)


### இறப்புக்கள்

1936 - கா. நமச்சிவாயம், தமிழறிஞர் (பி. 1876)

1975 - ஐவோ ஆண்டிரிக், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜோசப் பிரீஸ்ட்லி



உயிர்வளி என்று கூறப்படும் ஆக்ஸிஜனைக் கண்டுபிடித்த ஜோசப் பிரீஸ்ட்லி - Joseph Pri estley - 1733 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி பிறந்தார்.

இவர் ஓர் ஆங்கிலேய வேதியியல் அறிஞர். இவருடைய பல கண்டுபிடிப்பு முயற்சிகளில் ஆக்ஸிஜனைக் (ஒட்சிசன், உயிர்வளி) கண்டுபிடித்தது மிகவும் புகழ்வாய்ந்தது.

இவர் ஒரு சிறந்த ஆசிரியராகவும் மெய்யியல் அறிஞராகவும் திகழ்ந்தார். கார்பன்-டை-ஆக்சைடு (காபனீரொட்சைட்டு) பற்றிய இவருடைய ஆய்வுகளும் புகழ் பெற்றவை.

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

77

### மாப்பிள்ளை

ரஜினியின் மற்றொரு வெற்றிப் படம் **"மாப்பிள்ளை."** தெலுங்குப் படம் ஒன்றை தழுவி, வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுத, ராஜசேகர் இயக்கினார். திமிர்த்தனமாக நடந்துகொள்ளும் ஒரு மாமியாரை, மருமகன் அடக்கி புத்தி புகட்டும் கதை. (கிட்டத்தட்ட "பணமா, பாசமா?" மாதிரி)

ராஜராஜேஸ்வரி என்ற பணக்கார மாமியாராக, ஸ்ரீவித்யா முதன் முதலாக "வில்லி" முகம் காட்டிய படம்.

### கதை

ராஜராஜேஸ்வரிக்கு 3 மகன்கள். ஒரே மகள். மகள் அமலா வெளியூரில் தங்கி மருத்துவப் படிப்பை தொடர்கிறாள். அந்த ஊரில் வேலையில் இருக்கும் ரஜினிக்கும், அமலாவுக்கும் காதல் ஏற்படுகிறது. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ரஜினியின் தங்கை, பணக்கார ராஜராஜேஸ்வரியின் மகன் ராஜா மீது காதலாகிறாள்.

காதல் எல்லை மீறியதில் தவறு நிகழ்ந்துவிட, நிச்சயம் திருமணம செய்து கொள்கிறேன் என்று சத்தியம் செய்கிறான் ராஜா. சொன்னபடி தனது தாயார் ராஜராஜேஸ்வரியிடம் காதலியை அழைத்துப்போகிறான்.

வெகுண்டெழுந்த ராஜராஜேஸ்வரி, மகனின் காதலியையும், அவள் தாயாரையும் தனது செல்வாக்கால் போலீசில் மாட்டி விடுகிறாள். தாயாரும், தங்கையும் ஜெயிலில் இருக்கும் விடயம், வெளி ஊரில் இருக்கும் ரஜினிக்கு தெரிய வர, தாயாரையும், தங்கையையும் ஜெயிலில் சந்திக்கிறார்.

தங்கை மூலம் காதலன் யார் என்பதை தெரிந்து கொண்ட ரஜினி, ராஜாவை கண்டுபிடித்து நொறுக்குகிறார். ஆனால் ராஜா நல்லவன். அவன் தாயாரின் சூழ்ச்சிதான் இவ்வளவுக்கும் காரணம் என்று ரஜினி தெரிந்து கொள்கிறார். ஜெயிலிலிருந்து தாயாரையும், தங்கையையும் விடுவித்து, ரஜினியின் தங்கைக்கு ராஜா ஒரு கோவிலில் தாலி கட்டுகிறான்.

ஆனால் நடந்தது எதுவும் ராஜராஜேஸ்வரிக்கு தெரியாது. ரகசியமாக நடந்த இந்த திருமணத்தை ஊரறியச் செய்யவேண்டும், தங்கை அந்த வீட்டு மருமகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் ரஜினி சில முயற்சிகளை எடுக்கிறார்.


மாப்பிள்ளை படத்தில் ஸ்ரீவித்யாவுடன் ரஜினி

அப்போதுதான் தன்னை விரும்பிய அமலாவும், தன் தங்கை கணவர் ராஜாவும் அண்ணன் - தங்கை என்று தெரியவர, ராஜராஜேஸ்வரிக்கு பாடம் புகட்ட திட்டம் போடுகிறார் ரஜினி. அமலாவை மணந்து கொண்டு, ராஜராஜேஸ்வரி முன்பாக போய் நிற்கிறார்.

அதிர்ந்துபோன ராஜராஜேஸ்வரி தனது மருமகன் ரஜினிக்கு அடுக்கடுக்காக பல தொல்லைகள் கொடுக்கிறார். முதல் இரவுகூட நடக்கவிடாமல் தடுக்கிறார். ஆனால், தடைகள் தகர்க்கப்பட்டு ரஜினி வெற்றி பெறுகிறார். தோல்வியில் ஆத்திரமான ராஜராஜேஸ்வரி, மருமகன் என்றும் பாராமல் ரஜினியை கொல்ல அடியாட்களை ஏவி விடுகிறார். ஆனால், அத்தனை பேரும் அடி வாங்கிக் கொண்டு ஓடுகிறார்கள். ரஜினியும் மனைவி அமலாவுடன் வீட்டை விட்டு வெளியேறுகிறார். இந்த நிலையில் ராஜராஜேஸ்வரி தனக்கு யார் பாதுகாப்பு என்று நினைத்தாளோ, அவர்கள் அத்தனை பேரும் அவள் பணத்தை - திரண்ட சொத்தை கபளீகரம் செய்வதற்காகவே அவளுடன் இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்கிறாள். சுதாரித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குள் அவர்கள் முந்திக்கொண்டு ராஜராஜேஸ்வரியை கொடுமைப்படுத்தி சொத்துக்களை தங்கள் பெயருக்கு மாற்றித்தர கேட்கிறார்கள்.

ரஜினிக்கு இந்த விடயம் தெரியவர, எதிரிகளை பந்தாடி, மாமியாரை காப்பாற்றுகிறார். திருந்திய மாமியார், ரஜினியை தனது "மாப்பிள்ளை" என்பதை ஊரறியச் செய்கிறார். ரஜினியின் தங்கையை தன் மருமகளாகவும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்.

மாமியார் ஸ்ரீவித்யா - மருமகன் ரஜினி இருவரும் மோதிக் கொள்ளும் ஒவ்வொரு காட்சியும் கலகலப்பானவை. ரஜினி தனக்கே உரிய பாணியில் காமெடியிலும் கலக்கியிருந்தார். *(தொடரும்)*

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து - 99

...ஒருபக்க உதட்டுல ஓரமாச் சிரிச்சுக்கிட்டா கருவாச்சி.

ஒண்ணும் பேசல.

பால்குடிக்கிற பிள்ளைக்கு ஒரு பக்க முந்தானைய ஒதுக்கிக் குடுத்துட்டு பிள்ள முண்டி முண்டி முட்டுற சொகத்தக் கண்ணுமூடி அனுபவிச்சுக்கிட்டே சீ கடிக்குது பாரு கழுதைன்னு பிள்ள தலையில ஒரு சொல்த் தட்டுத்தட்டிட்டுக் கருவாச்சி சொல்றா.

புத்தி யாருக்கு இல்ல எல்லாருக்கும் இருக்குடி.

என்னா ஒண்ணு எல்லாப் புத்தியும் அடைச்சுக் கெடக்கு.

கையில ஒரு சுத்தி வச்சு அலைஞ்சுக்கிட்டேயிருக்கு காலம்.

அப்பப்ப புத்தியில பொட்டு பொட்டுன்னு போட்டு போயிக்கிட்டேயிருக்கு.

போடுற போட்டுல சில புத்தி தெறந்திருது.

இதுக்கெல்லாம் அசந்திருவனான்னு சிலது அடைச்சே கெடக்கு.

இருக்கட்டும். பெருசு என்ன சொல்றாரு?

புத்தி மாறி உக்காந்திருக்காரு எங்க அப்பன்.

மானம் மரியாதிக்கு அஞ்சி இஞ்சிக் கெடக்கறோம் நாங்க.

ஒரு ஆறுமாசம் ஆற விடுங்கடி மனுசன் கேக்குற கேள்விக்கு மாசம் பதில் சொல்லுமடி ஆள் செய்யாததை நாள் செய்யும்ன்னு சும்மாவா சொன்னாக?

யோசிக்கிறா கருவாச்சி.

அவளுக்கு அவளே பேசிக்கிறா.

காடு இருக்கு உழுக மாடு இல்ல.

வீடு இருக்கு; ஆள் இல்ல.

பிள்ள இருக்கு; புருசன் இல்ல.

கைகாலு இருக்கு; காசில்ல.

மண்ட வலி காய்ச்சல்ன்னு விழுந்தாலும் ஒரு சுக்குத்தண்ணி வச்சுக் குடுக்கச் சொந்தம் பந்தம் இல்ல.

செயிக்கிறனோ இல்லையோ தோத்துப் போகமாட்டேன் மாமா.

பஞ்சாயத்துல சொன்ன சொல்லு மட்டுந்தான் நெஞ்சாங்குலையப் புடிச்சு நிமிண்டிக்கிட்டேயிருக்கு.

பொழைச்சுக் காமிக்கணும்.

பொழைக்கிறது முக்கியமல்ல.

மானத்தோட பொழைக்கணும்.

நெல்ல வெதைக்கிறோம். உள்ள அரிசியிருக்கு.

வெளிய உமி இருக்கு.

அரிசிதான் மொளைக்கிது.



ஆனா உமி இல்லாம அரிசியை மட்டும் வெதைச்சா மொளைக்குமா? மொளைக்காது.

அரிசிதான் பொழப்பு. உமிதான் மானம்.

உமியில்லாத அரிசி மொளைக்காது. மானமில்லாத பொழைப்புக்கு மதிப்பேது?

சொல்லிக் குடுக்கல யாரும் அவ புத்திக்குள்ள புதுசு புதுசா முட்டுது என்னென்னமோ.

ஒடம்பு நோக ஒழைக்கணும். பாடு பட்ட மேனி பவுனு படாத மேனி புண்ணு ஒரே வேல செஞ்சு ஒண்ணுக்கும் ஆகாது.

சகல வேலையும் பழகணும்.

தண்ணியில விட்டாலும் இருக்குமாம். தரையில விட்டாலும் பொழைக்குமாம். தவள மாதிரி இருக்கணும்.

அண்ணந்தம்பி ஒறவுன்னாலும் தள்ளி நின்னே பழகணும்.

சொலவம் சொல்லுதா இல்லையா மெத்தப் பழகுனாப் பித்தளையும் பீ நாறும். என் வாய் உண்டது வகுறு கொண்டது போக மிச்சத்தக் கஞ்சியில்லாமக் கெடக்குற உசுருகளுக்கும் கைகால் வெளங்காத கெழடுகெட்டைகளும் ஆடு மாட்டுக்கும் காக்கா குருவிக்கும் குடுக்கணும்.

அள்ளிக்குடுக்கலேன்னாலும் கிள்ளிக் குடுக்கணும்.

பிள்ள பெத்த மேனி ஆம்ள சொகம் என்னான்னு அறிஞ்ச ஒடம்பு. மூடி மூடி மூடி வச்சாலும் உள்ளுக்குள்ள என்னமோ முணுமுணுக்குற பருவம். *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யக்கோரிக்கை!

**(கொழும்பு)**

**முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும் தேசிய நிறைவேற்றுப் பேரவையில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**



அவன்ட் கார்ட் ஆயுதக் கப்பல் தொடர்பில் விசாரணை நடத்த கோத்தபாயவை கைது செய்ய வேண்டுமென தேசிய நிறைவேற்றுப் பேரவை ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரித்தானிய விஜயத்தை அடுத்து இது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

அவன்ட் கார்ட் சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யோசனை முன்வைத்துள்ளார்.

அவன்ட் கார்ட் சம்பவம் தொடர்பில் தேசிய நிறைவேற்றுப் பேரவையில் விரிவாக பேசப்பட்டது என ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தேசிய நிறைவேற்றுப் பேரவை நேற்று முன்தினம் கூடிய போது இந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பேசும் படம் - 51

இடம்:-காக்கைதீவு



பணக்காரனால் எறியப்பட்ட வெற்றுப் போத்தல் ....
ஏழையின் காலுக்கு செருப்பாகி விடுகிறது...

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம், வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
வி.விபுலானந்த்
யாழ்ப்பாணம்

உங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க விரும்பினால் பேசும் படத்துடன் அனுப்பி வைக்கவும்.

## இயற்கைக் காரணங்களினால் திசைமாறிச் செல்லும்

# மீனவர்களைச் சுடுவோம் என்று ஒருநாட்டின் பிரதமர் பேசலாமா?

### த ஹிந்து கேள்வி

**(சென்னை)**

**மீன்பாடு தேடிக் கடலில் பயணிக்கும் மீனவர்கள் வழிதவறிச் செல்வதும் கடலில் ஏற்படும் நீரோட்டங்களாலோ இதர இயற்கைக் காரணங்களாலோ திசை தெரியாமல் தடுமாறிச் செல்வதும் வழக்கம்தான். இதற்காகச் சுடுவோம் என்று ஒரு நாட்டின் பிரதமர் பேசலாமா? என்று இந்தியாவிலிருந்து வெளிவரும் த ஹிந்து பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.**

மென்மையான கண்டிப்பு இனியும் வேண்டாம் என்ற அந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது.

பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொள்ளவிருக்கும் பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது.

ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த காலத்துக்குப் பிறகு, இலங்கை செல்லவிருக்கும் முதல் பிரதமர் நரேந்திர மோடி தான்.

இந்த நிலையில், "கடல் எல்லையைத் தாண்டி, இலங்கைக் கடல் பகுதிக்கு வரும் இந்திய மீனவர்களைச் சுடுவது நியாயம்தான்" என்று இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே பேசியிருப்பது சுருதிபேதமாக ஒலிக்கிறது.

வேறு நாட்டுக் கடல் எல்லைக்குள் புகுந்துவிடும் மீனவர்களைச் சுடக் கூடாது என்ற சர்வதேசச் சட்டங்களுக்கு முரணாகவும் நியாயமான நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டும் இருக்கிறது அவருடைய பேச்சு.

மீன்பாடு தேடிக் கடலில் பயணிக்கும் மீனவர்கள் வழி தவறிச் செல்வதும் கடலில் ஏற்படும் நீரோட்டங்களாலோ இதர இயற்கைக் காரணங்களாலோ திசை தெரியாமல் தடுமாறிச் செல்வதும் வழக்கம் தான். இதற்காகச் சுடுவோம் என்று ஒரு நாட்டின் பிரதமர் பேசலாமா?

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது தன்னுடைய எதிர்ப்பை நேரடியாகத் தெரிவித்திருக்கிறார்.

இத்தாலியக் கடற்படையினரை இந்தியக் கடற்படையினர் விரட்டிச் சென்று கைதுசெய்ததை இதற்கு உதாரணமாக ரணில் காட்டியிருக்கிறார்.

இரு சம்பவங்களின் பின்னணியுமே வேறு என்பதை சுஷ்மா உணர்த்திய பிறகே, தான் தவறாகப் புரிந்துகொண்டதை ரணில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்தியக் கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த, ஆயுதமேதுமற்ற நிராயுதபாணிகளை முன்னறிவிப்பு ஏதும் தராமல், இத்தாலியர்கள் சுட்டுக்கொன்றது குற்றம் என்பதால்தான் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அந்தச் சம்பவமும் இந்திய மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது எல்லையைத் தாண்டுவதும் எப்படி ஒன்றாகிவிட முடியும்?

ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை, இரட்டை மடி வலையுடன் கடலை அரித்து மீன்களை மட்டுமல்லாது மீன் குஞ்சுகளையும் சேர்த்துப் பிடித்து கடல் வளத்தையே வற்றச் செய்துவிடுகிறார்கள் என்று இந்திய மீனவர்கள் மீது, குறிப்பாகத் தமிழக மீனவர்கள் மீது இலங்கை குற்றம் சாட்டிவருகிறது.

இதனாலேயே கடலில் இந்திய மீன்பிடிப் படகுகளைத் தங்கள் எல்லைக்குள் கண்டால், விரட்டிச் சென்று சுடுவது, வலைகளை அறுத்துக் கடலில் வீசுவது, மீனவர்களைக் கடுமையாகத் தாக்குவது, மீன்பாடுகளைக் கைப்பற்றுவது என்றெல்லாம் அத்துமீறுகிறது.

பல வேளைகளில் மீனவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைப்பதுடன் படகுகளையும் பறிமுதல் செய்துவிடுகிறது. சமரசப் பேச்சுகளுக்குப் பிறகு, கைதான மீனவர்கள் மட்டும் விடுதலை செய்யப்படுகின்றனர். படகுகள் விடுவிக்கப்படுவதில்லை.

சில வேளைகளில் இலங்கைப் படையினர் தமிழக மீனவர்களைக் கொடூரமாகச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

இலங்கை இந்த விடயத்தில் தொடர்ந்து கடுமையான போக்கைக் கடைப்பிடித்தாலும் இந்திய அரசு அதையெல்லாம் பார்த்துக் கொண்டு மென்மையாகக் கண்டிப்பதுடன் நின்றுவிடுகிறது.

இலங்கைதான் இதுபோன்று நடந்து கொள்கிறதே தவிர, இந்தியா அப்படியெல்லாம் நடந்துகொள்வதில்லை.


இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்த மீனவர்கள் பல சமயங்களில் பிடிபட்டிருக்கிறார்கள்.

அவர்களை இந்தியா இப்படியா நடத்துகிறது? இப்போது, இந்தியா விடுக்கக்கூடிய எச்சரிக்கை வழக்கமானதாக இல்லாமல் இனிமேல் இதுபோன்றெல்லாம் அத்துமீறுவதற்கு இலங்கை அஞ்சக்கூடிய வகையில் இருப்பது அவசியம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை இனத்தவர்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதே கூட்டணியின் நோக்கம்

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு த.வி.கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி எழுதிய கடிதத்தின் சுருக்கம் இங்கு பிரசுரமாகிறது**



தற்போது நான் வகிக்கின்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் பதவி அ.அமிர்தலிங்கம் 1989ஆம் ஆண்டு அவர் படுகொலை செய்யப்படுவதற்கு முன்பதாக வகித்து வந்ததாகும். அகிம்சையையும், சகிப்புத்தன்மையையும் மிக வலுவாக முன்னெடுத்தமைக்காக யுனெஸ்கோ ஸ்தாபனத்தால் 2006ஆம் ஆண்டுககான "மதன்ஜித்சிங்" விருது எனக்கு கிடைக்கப்பெற்றது. 17 ஆண்டுகளுக்கு மேல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் வகித்து வந்துள்ளேன். பிரபல வழக்குரைஞரான கியூ.சி பட்டத்தைப் பெற்ற அமரர் சா.ஜே.வே. செல்வநாயககத்தால் 1972ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதே த.வி.கூ ஆகும. மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளை தீவிரமாக பின்பற்றியமையால் மிக்க மதிப்புடனும், நேசிக்கப்பட்டு ஈழத்துகாந்தி என வாஞ்சையுடன் அவர் மக்களால் அழைக்கப்பட்டார்.

தமிழ் பேசும் பல்வேறு சிறுபான்மை இனத்தவர்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் பல நோக்கங்களில் பிரதானமாகவும், அன்றைய அத்தியாவசிய தேவையாகவும் இருந்தது. சோல்பரி அரசியல் சாசனத்துடன் 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த இலங்கையில் ஏற்கனவே இருந்த அற்ப சொற்ப அரசியல் உரிமைகளும் நியாயமற்ற முறையில். மறுக்கப்பட்டு புதிய அரசியல் சாசனம் மூலம் குடியரசாக மாற்றமடைந்தது. அன்றைய தமிழ் மக்களின் ஒற்றுமையின் அத்தியாவசியத்தை உணர்ந்த சா.ஜே.வே. செல்வநாயகம் 23 வருடமாக நிலைத்திருந்த அரசியல்குரோதத்தை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு 1945ஆம் ஆண்டுதன்னுடன்இணைந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை உருவாக்கி அக்கட்சியின் தலைவரான ஜி.ஜி.பொன்னம்பலத்தை சந்தித்து அன்று தமிழ்மக்கள் முகம் கொடுத்த சவாலை எதிர்கொள்வ தற்காக தன்னுடன் இணையுமாறு, அவரின் வீடு சென்று அழைப்பு விடுத்தார். மிகவும் பாராட்டத்தகக வகையில் அகில இலங்கை தமிழ் காஙகிரஸ் தலைவர் எந்தவித தயக்கமுமின்றி தமிழரசு கட்சி தலைவருக்கு முழு ஆதரவு கொடுப்பதற்கு இசைந்தார்.

அத்தகையதொரு பலமான அத்திபாரத்தில தமிழ் மக்களுக்காக பணியாற்ற ஒரு நிரநதர அமைப்பாக தமிழர்விடுதலைக்கூட்டணி உருவாக்கப்பட்டதே அன்றி எவரும் இந்த அமைப்பிடம் முறையற்று தலையிடுவதற்கல்ல. தமிழ தேசிய கூட்டமைப்பு (TNA) என தம்மை அழைத்துக் கொண்டு தற்போது இலங்கை தமிழரசு கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய ஐந்து கட்சிகளையும் உள்ளடக்கியதாக கூறிக் கொண்ட ஒரு தூதுக்குழ தாங்களை சந்தித்தது. இந்தக் தூதுக்குழுவில் தமிழரசுக் கட்சியை சேர்ந்த நால்வரும், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் பிரதிநிதிகள் தலா ஒவ்வொருவரும் மட்டுமே தங்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டனர். 55 ஆண்டுகளுக்கு மேல் அரசியலில் ஈடுபாடு கொண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரையோ வேறு எவருடனுமோ கலந்து ஆலோசிக்கவும், அழைக்கவும் இல்லை. மேலிடத்திலிருந்து பணிப்பு எதுவும் வரவில்லை போலும்.


மதிப்புக்குரிய பிரதம மந்திரி அவர்களே! நான் சமஷ்டி ஆட்சி முறைக்கு மாற்றாக இந்திய முறையிலான அரசியல் சாசனத்தையொத்த ஒரு தீர்வை முன்வைத்து பிரசாரம் செய்து வருகிறேன். இதற்கு எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் எதிர்ப்பு வரவில்லை.

த.தே.கூ.இன் நான்கு கட்சிகளின் செயலாளர்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய உத்தரவாதம் 2004 ஏப்ரல் தொடக்கம் 2009 மே 18 ஆம் திகதி வரை விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள், குண்டுவெடிப்புக்கள், மிகக்கொடூரமான குற்றச்செயல்கள மேற்கொள்வதற்கு காரணமாய் அமைநததோடு பல ஆயிரக்கணக்கான அப்பாவி ஆணகள், பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் இழப்புக்களுக்கும் காரணமாய் அமைந்துள்ளது. 2004 ஆம் ஆண்டு த.தே.கூ.இனரால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் படி அனைத்து விதமான இழப்புக்களுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பொறுப்புக்கூறல் வேணடும். முக்கிய தீர்மானங்கள் மேற்கொளளும்போது அனுபவங்கள் இல்லாதவர்களி டம் கையளிப்பதால் ஏற்படுகின்ற வினையே இதுவாகும்.

அரசுடன் பேசுகின்ற ஆணையை தமிழரசு கட்சிக்கும், த.தே.கூ.இற்கும் பல்வேறு தேர்தல்கள் மூலம் மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள் என்று கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாதது மட்டுமல்ல தவறான பாதைக்கும் இட்டுச்செல்கின்றது. 2004ஆம் ஆண்டு வடகிழக்கில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் அற்ப சொற்ப அரசின் தலையீட்டுடன் முற்றுமுழுவதுமாக விடுதலைப் புலிகளாலேயே நடத்தி வைக்கப்பட்டது. அத்தேர்தலில் ஆள்மாறாட்டம், அச்சுறுத்தல் என்பன வாக்களார்களுக்கு புலிகளால் நிறையவே இருந்தன. இத் தேர்தலில் தோற்றவர்கள் வெல்ல வைக்கப்பட்டார்கள். அதேபோன்று 2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் பல்வேறு தேர்தல் மாவட்டங்களில் 9 வீதத்திலிருந்து 0.85 வீத மக்களே தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் ஏறக்குறைய 7,50,000 வாக்குகளில் ஏறக்குறைய 65,000 மக்களே வாக்களித்தனர். இது வெறும் 9 வீதமாகும். இத்தகைய குறைந்த வாக்கை மக்களின் ஆணை என்று கூற முடியாது.

கௌரவ பிரதமர் அவர்களே! தங்களால் கூறப்பட்ட ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு தமிழ் பேசும் அரசியல் கட்சி களையும் கலந்து ஆலோசித்து ஒரு பொது வான நிலைப்பாடு எடுப்பதற்காகவே அன்றி தமி ழரசு கட்சி ,தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய வற்றுடன் முரண்படுவதற்கல்ல. இவர்களு க்கு இனப் பிரச்சினை தீர்வில் அக்கறை இருப்பின் அவர்கள் விடுதலைப் புலிகளு டன் உள்ள தொடர்பை துண்டிக்க வேண்டு மென எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கணித பாட செயற்பாட்டு முகாம் உயரப்புலம் மெதடிஸ்த மிஷனில்



யாழ்.கல்வி வலயத்தினைச் சேர்ந்த ஆரம்பப்பிரிவு பாடசாலைகளில் 5 பாடசாலைகளிற்கான கணிதபாட செயற்பாட்டு முகாம் நேற்றைய தினம் யாழ்.உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெற்றுள்ளது.

மாணவர்களின் கணிதத்திறனை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட இச் செயற்பாட்டு முகாமில் உயரப்புலம் மெதடிஸ்த மிஷன், ஞான பண்டிதா, கொக்குவில் மேற்கு ஸ்தான பாடசாலை, கொக்குவில் ஸ்தான பாடசாலை, வைத்திலிங்கம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

வலய மற்றும் கோட்டப் பணிப்பாளர்களின் வழிகாட்டலில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் பல மாணவர்கள் பங்குபற்றி தமது திறன்களினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இப்பயிற்சி முகாமில் உயரப்புலம் வித்தியாலயத்தின் பாடசாலை அதிபர் கு.தீலிபன் மற்றும் வைத்திலிங்க வித்தியாலயத்தின் பாடசாலை அதிபர் [illegible] கலந்து கொண்டிருந்தனர். (இ-4)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 36 1/2 செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BBA/ அரச தொழில்<br>தொ.இ: B/4284 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா: 43<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4298 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 31<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில் சுவிஸ் PR<br>தொ.இ: B/4285 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/596 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 31<br>சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:விமானி<br>தொ.இ: B/4287 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 42 செவ் இல்<br>உயரம்: 5'1"தகைமை/தொழில்: BBM, CIMA<br>தொ.இ: G/598 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 12<br>உயரம்: 5'6".<br>தகைமை/தொழில்: BFA, MBA/ அரசதொழில்<br>தொ.இ: B/4288 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 34 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/604 |


கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற்பரிசுத் தேர்வுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் சிறந்த நூற்பரிசுத் தேர்வுக்கான போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.




வலி.வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட துறைசார்ந்த நூலாசிரியர்கள் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று நூலின் நான்கு பிரதிகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

இதற்கான நூல்கள் யாவும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்த முதற்பதிப்பாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை தெல்லிப்பழை பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கே.சிறிமோகனன் அறிவித்துள்ளார். (இ-5)




## ஆக்கம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலக கலாசார பேரவை மற்றும் பிரதேச செயலகம் என்பன இணைந்து வெளியிடவுள்ள கலாசார மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை அனுப்புவோர் இதுவரை பிரசுரமாகாத தமது சொந்தப் படைப்பான நெடுந்தீவு பிரதேசம் சார்ந்த அதனை பிரதிபலிக்கக் கூடியதான கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடல்கள், செய்தித்துளிகள், விடுகதைகள், குறுங்கவிதைகள் போன்ற ஆக்கங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், நெடுந்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

## மெய்வல்லுநர் போட்டி ஞாயிற்றுக்கிழமை

(யாப்பாணம்)

பருத்தித்துறை திக்கம் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணியளவில் திக்கம் பாடசாலை விளையாட்டரங்கில் திக்கம் மத்திய சனசமூக நிலைய தலைவர் க.திருவரங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிற்றம்பலம் புஸ்பலிங்கம், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரான வே.சிவயோகன் சி.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (இ-3)

# பிரதமர் மோடியின் வருகையை முன்னிட்டு யாழில் தொடர் உண்ணாவிரத போராட்டம்



(யாழ்ப்பாணம்)

**இந்தியப் பிரதமரின் யாழ்ப்பாண விஜயத்தினை முன்னிட்டு பிரதமரிடம் பல கோரிக்கைகளை முன்வைத்து போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இயக்கம் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ் உண்ணாவிரதப் போராட்டத்தினை மேற்படி இயக்கத்தின் தலைவர் வி.சகாதேவன் முன்னெடுத்துள்ளார்.**

யாழ்.பொது நூலகம் முன்பாக நேற்று காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம், கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை முன்னெடுக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியல் கைதிகள், கடத்தப்பட்டோர், காணாமற் போனோர் விடுதலை, எல்லைதாண்டும் மீனவர் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணுதல், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகள் வழங்குதல், கணவனை இழந்த பெண்கள், பெற்றோரை இழந்தோர், காயமடைந்தோருக்கான உதவிகள் வழங்குதல், வடகிழக்கு பிள்ளைகளின் கல்விக்கு, வேலைவாய்ப்புக்கு உதவுதல், இடம்பெயர்ந்த, புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு தமது சொந்தக் காணிகளை கிடைக்கச் செய்தல்,

உள்ளூரிலும் சர்வதேசத்திலும் தமிழகத்திலும் அகதிகளாகவுள்ள மக்களின் மீள்குடியேற்றம், தொழில், வீட்டு வசதிகள், போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர நினைவுச் சின்னம் ஒன்றையும் நினைவு நாள் ஒன்றையும் பிரகடனப்படுத்துதல்,

ஐக்கிய நாடுகள் பேரவையின் தீர்மானத்தில் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தல், ஈழத்தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இவ் உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை தாம் இந்திய துணைத் தூதரகத்திற்கு 6 பக்க கடிதமாக அனுப்பி வைத்துள்ளதாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

மேலும் நேற்றையதினம் இவ்வாறு உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த போது அங்கு திடீரென பொலிஸாருடன் வந்த யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் செ.பிரணவநாதன் உண்ணாவிரத கொட்டகையினை அகற்றியதோடு பதாகைகளையும் அகற்றிவிட்டு சென்றனர்.

இருந்த போதிலும் உண்ணாவிரத போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது. (இ-4)

## இரு அணியினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கோட்டமட்டத்தில் இரண்டு முதலிடங்களைப் பெற்று வலய மட்டப் போட்டிக்கு யாழ். மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலையினைச் சேர்ந்த இரு அணியினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டியில் இப்பாடசாலையைச் சேர்ந்த 8 வயது அணியினரும் 10 வயது அணியினரும் கோட்டமட்டப் போட்டியில் முதலிடங்களைப் பெற்று வலய மட்டப் போட்டியில் கலந்து கொள்ள உள்ளனர் என அதிபர் அறிவித்துள்ளார். (இ

## நிர்வாகசபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக மீண்டும் இ.ஜெயசேகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதேவேளை உப தலைவராக எஸ்.டி.பரமேஸ்வரனும், செயலாளராக இ.ஜனக்குமாரும், உப செயலாளராக ச. சிவகுமரனும், பொருளாளராக இ. ஜெயராசாவும் பணிப்பாளர்களாக சி.கேசவன், த.சற்குணராசா, எஸ்.மணிவர்ணன், த.குணசிங்கம், எஸ்.சிவலோகேசன், எஸ்.தினேஷன், ஜே.எஸ்.ஏ.நிக்சன், ந.ஜெகமோகன், செ.சுதர்சன், எஸ்.சிவதாசன், த.கந்தசாமி, கு.கங்கைவேணியன், வே. திருச்செல்வம், கே.ஜெயந்தன் ஆகியோர் புதிய நிர்வாக சபையில் அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ







உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு நடைபெறுவதையும் விருந்தினர் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசில் ராஜபக்ஷவினை நாடுகடத்த வேண்டும்

(கொழும்பு)

**ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அமெரிக்காவில் இருந்து நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.**



மகிந்த அரசாங்கத்தின் ஊழல்கள் மற்றும் மோசடிகளை கண்டுபிடிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நிதி மோசடி பொலிஸ் விசாரணை பிரிவு இந்தக் கோரிக்கையை சட்டமா அதிபரிடம் விடுத்துள்ளது.

திவிநெகும திட்டத்தின் போது பசில் ராஜபக்ஷ பாரியளவு நிதி மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பில் முழுமையான தகவல்களை திரட்டுவதற்கு பசில் ராஜபக்ஷவை விசாரணை செய்ய வேண்டியுள்ளதாக நிதிமோசடி தொடர்பான பொலிஸ் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# ஆசிரியர் உதவியாளர் போட்டியின் இரகசியத்தன்மை பேணப்படுமாம்



பெருந்தோட்டத்துறை ஆசிரியர் உதவியாளர் போட்டி பரீட்சை பெறுபேறுகளின் புள்ளிகள் தொடர்பில் இரகசிய தன்மை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பரீட்சையின் புள்ளிகள் நேர்முகத் தேர்விற்கு முன்னர் வழங்கப்பட வேண்டும் என பரீட்சார்த்திகளால் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும், நேர்முகத் தேர்வு ஒன்றின் போது புள்ளிகள் வழங் கப்படுமாயின் அதற்கு முன்னதாக இடம் பெறும் எழுத்து மூல பரீட்சையின் புள்ளிகள் வெளியிடப்படாது என கல்வி அமைச்சு தெரிவித்து வருகின்றது.

இந்த விவாதங்களுக்கு மத்தியிலேயே பரீட்சைகள் ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வர்த்தமானியின் 1589இன் கீழ் 30- 77 ஆவது சரத்தின்கீழ், போட்டி பரீட்சையில் புள்ளிகள் அடிப்படையில் அதிக புள்ளிகளை பெற்றுக் கொண்டவர்கள் வெற்றிடங்களின் மூன்று மடங்கினர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

இதன் அடிப்படையிலேயே நேர்முகத் தேர்விற்கான அழைப்புகளும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரச நியமனத்திற்காக புள்ளிகள் வழங்குவதற்காக நடத்தப்படும் எழுத்து மூல பரீட்சையின் முடிவுகள் வெளியிடப்படாமல் நேர்முகத் தேர்வு நிறைவு பெற்று மொத்த புள்ளிகள் வழங்கப்படும் வரை இரகசிய தன்மை பாதுகாக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## புதிய மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் புதிய மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 2015ஆம் கல்வியாண்டிற்கான முழுநேர கற்கை நெறியில் பதிவினை மேற்கொண்ட அனைத்து கற்கை நெறிகளையும் சேர்ந்த மாணவர்களும் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவருடன் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை முழுநேர கற்கை நெறிகள் 16.03.2015 ஆம் திகதியும், பகுதிநேர கற்கைநெறிகள் 21.03.2015 ஆம் திகதியும் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# சஜின்வாஸ் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம்

(கொழும்பு)



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்த்தன நேற்று முற்பகல் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகியிருந்தார்.

அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காகவே சஜின் டி வாஸ் குணவர்த்தன அங்கு சென்றுள்ளார். அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுவதாக ஊழல், ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது.

ஊழல்ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், சுகயனம் காரணமாக அவர் நேற்று முன்தினம் ஆஜராக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பிரிட்டனில் இலங்கையர் அடித்துக் கொலை!

(கொழும்பு)

பிரிட்டனில் இலங்கையர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து இதுவரை நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு மிட்லேண்ட் - பொலேசில் பகுதியில் உள்ள வீட்டில் வைத்து கடந்த மார்ச் 5 ஆம் திகதி அடிகாயங்களுடன் ஒருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அன்றைய தினம மாலை உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் இலங்கைப் பிரஜையான 48 வயதுடைய அருணாச்சலம் அருணோதயன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் இவர் தாக்குதலுக்கு உள்ளாகியே உயிரிழந்ததாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து கொலைச் சந்தேகத்தின் பேரில் கொவன்றி, பெட்வேர்த் பகுதி விடுதி ஒன்றில் பணிபுரியும் கிரிதாஸ் சிறிஸ்கந்தராஜா என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் பேர்மிங்காம் குற்றவியல் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

இந்நிலையில் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 20, 31 மற்றும் 39 வயதுடைய மேலும் மூவர் கைது செய்யப்பட்டு ள்ளதாக தெரிய வருகிறது. (இ)

# மாகாண சபைக்கு புதிய முதலமைச்சர்



மத்திய மாகாண முதலமைச்சராக திலின பண்டார தென்னக்கோனை நியமிக்குமாறு கோரி மாகாண சபையின் 30 ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளுநரிடம் சத்திய கடதாசி கையளித்துள்ளனர்.

சத்திய கடதாசி வழங்கிய உறுப்பினர்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்களும் அடங்குவதாக மத்திய மாகர்ண சபை உறுப்பினர் திலின பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

சத்திய கடதாசிகளை கையளிக்கும்போது மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் வசந்த அலுவிஹாரேயும் பிரசன்னமாகியிருந்ததாக அவர் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையில் மொத்தமாக 58 உறுப்பினர்கள் உள்ளதுடன் மாகாண முதலமைச்சராக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர் சரத் ஏக்கநாயக்க பதவி வகித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் இந்த விடயம் குறித்து ஆராய்ந்து தீர்மானமொன்றை மேற்கொள்வதாக மத்திய மாகாண ஆளுநர் சுராங்கனி எல்லாவெல தெரிவித்துள்ளார். (இ)

# பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி. வைத்தியநாதக்குருக்கள் ஜெயவர்த்தினிஅம்மா**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியநாதக் குருக்கள் ஜெயவர்த்தினி அம்மா கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் மு.ப 10 மணியளவில் 18,துரைராஜா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**பிரான்சிஸ் அகஸ்டஸ்யோண்**



சுன்னாகம் சூராவத்தையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் அகஸ்டஸ்யோண் கடந்த 9 ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



**திருமதி ஜெயகுணாளன் பூரணம்**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஜெயகுணாளன் பூரணம் கடந்த 9ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை சனிக்கிழமை Grace New Convenant Pentecostal Church, 18 00 Ellesmere Road, Scarborough, ON M1H 2V5 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர்பூதவுடல் நல்லடக்கம்செய்யப்படும்.

**தியாகராஜா துசான்**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா துசான் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று மூற்பகல் 11 மணிக்கு IMI. இல் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**திருமதி மயிலேறும்பெருமாள் ரதி**

பருத்தித்துறை நாகலிங்கம் முதலியார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயிலேறும்பெருமாள் ரதி நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற அபிராமி வயது –11 என்னும் சிறுவர்கள் மீதான வன்முறைக்கு எதிரான குறுந்திரைப் படத்தை யாழ். மாவட்ட அரச அதிபர் வெளியிட்டு வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:– மானிப்பாய் செய்தியாளர்)






முன்னாள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரனுக்கான பாராட்டுவிழா அண்மையில் பருத்தித்துறையில் இடம்பெற்றது. இதன்போது டாக்டர் கேதீஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் விருந்தினர்களின் ஒரு பகுதியினரையும் நடன நிகழ்வையும் படங்களில் காணலாம்.



இணுவில் கிழக்கு இளைஞர் கழக உறவுகள் ஒன்றிணைந்து எழில் மிகு கிராமத்தை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளின் கீழ் முதற் செயற்பாடாய் இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க முன்பள்ளி வளாகத்தை அண்மையில் சிரமதானம் செய்த போது...



அரச பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பாடசாலை உபகரணங்களை புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஏ.சிவநாதனிடம் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் அண்மையில் கையளித்த போது...







யூனிற்றி மிஷன் ரஸ்ற்றின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வின் போது...



கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த கயிலாயபிள்ளை சந்திரகுலசிங்கம் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற அரச விருது வழங்கும் நிகழ்வில் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போது...




யாழ். லைக்கா ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் அல்லிராஜா சுபாஸ்கரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு பயனாளிகள் 5 பேருக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை, உலர் உணவுப் பொருட்கள், 200 மாணவர்களுக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு வங்கிப் புத்தகம் என்பன அண்மையில் வழங்கப்பட்ட போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அதிகாரிகள் 108 பேர் தற்கொலை!

### அதிர்ச்சித் தகவல் வெளியீடு

**2014 ஆம் ஆண்டு மட்டும் இராணுவம் மற்றும் விமானப் படையில் பணிபுரிந்த 108 பாதுகாப்பு அதிகாரிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் அதிர்ச்சி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்வமாக பதிலளித்த பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், 2014 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி வரை, இராணுவத்தில் பணியாற்றும் 84 பேரும், விமானப்படையில் பணிபுரியும் 24 பேரும் தறகொலை முடிவை தேடிக் கொண்டுள்ளனர்.

மேலும், நீண்டகால தொடர் வேலை, உள்நாட்டு பிரச்சினைகள், தனிப்பட்ட பிரச்சினைகள், நிதி பிரச்சினைகள், மன உளைச்சல் மற்றும் மன அழுத்தத்தை தாங்க இயலாமை போன்றவையே இது போன்ற சம்பவங்களுக்கு காரணங்கள். உளவியல் ஆலோசனை, யோகா பயிற்சி என்று பணியாளர் தற்கொலையைத் தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்றும் அவர் மேலும் விளக்கம் அளித்தார். (இ-5)

## பாரதச் செய்தி

## மணிப்பூரில் குண்டு வெடித்ததில் 4 பேர் பலி; 23 பேர் படுகாயம்!

மணிப்பூர் மாநிலத்திலுள்ள வணிக வளாகம் ஒன்றில் குண்டு வெடித்ததில் 4 பேர் பலியாகினர். 23 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.


மணிப்பூர் மாநிலம் இம்பால் மாவட்டத்தில் உள்ள வணிக வளாகம் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை குண்டு வெடித்தது. இதில் 4 பேர் பலியாகினர். 23 பேர் படுகாயம் அடைந்தனர்.

படுகாயம் அடைந்தவர்கள் மாவட்ட மருத்துவ கல்லூரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு இதுவரை யாரும் பொறுப்பு ஏற்கவில்லை. இந்நிலையில் பொலிஸார் இது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-5)

## மன்மோகன் நேர்மையானவர்; சோனியா காந்தி நற்சான்றிதழ்



நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு வழக்கில் சி.பி.ஐ., அழைப்பாணை அனுப்பியதை தொடர்ந்து அடுத்து அடுத்து என்ன நடக்குமோ என காங்கிரசில் பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டுள்ளது. எந்தவொரு பிரச்னயானாலும் மன்மோகனுக்கு துணையாக நிற்போம் என காங். தலைவர் சோனியா உள்ளிட்ட கட்சியின் மூத்த நிர்வாகிகள் கூறி உள்ளனர்.

மேலும், அடுத்து எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க தொடங்கியிருக்கின்றனர். நிலக்கரி சுரங்க ஊழல் வழக்கில், மன்மோகன் சிங் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆஜராக வேண்டும் என சி.பி.ஐ., நீதிமன்றம் உத்தர விட்டதை அடுத்து காங்., தரப்பில் கலக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் மன்மோகன்சிங் மனம்தளர தேவையில்லை. நாங்கள் இருக்கிறோம். எதையும் மனத் திடத்துடன் எதிர்கொள்வோம் என காங். தனது முழு ஆதரவை தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் மன் மோகன் சிங்கிற்கு கொடுக்க உள்ள ஆதரவை வெளிப்படுத்தும் விதமாக காங். தலைமை அலுவலகத்திற்கு காங். தலைவர் சோனியா மற்றும் எம்.பி.க்கள் குவிந்தனர்.

பின்னர் அவர்கள் சோனியா தலைமையில் மன்மோகன்சிங் வீட்டிற்கு பேரணியாக சென்றனர். நாங்கள் உங்கள் பின்னால் ஒற்றுமையாக நிற்கிறோம் என உணர்த்தும் நோக்கில் இவ்வாறு சென்றதாக காங். வட்டாரம் தெரிவிக்கிறது.

சோனியாவுடன், காங். மூத்த தலைவர்கள் குலாம் நபி ஆசாத், ஏ.கே., அந்தோணி, ப.சிதம்பரம், மல்லிகார்ஜுன்கார்கே , ஆனந்த குமார் சர்மா உள்ளிட்ட பலர் சென்றனர்.

இவர்களை பார்த்து மன்மோகன்சிங் வீட்டில் இருந்து வெளியே வந்ததும் அங்கு தயாராக இருந்த பூங்கொத்தை அனைவரும் மன்மோகனுக்கு கொடுத்து தங்களின் ஆதரவை தெரிவித்தனர்.

மன்மோகன் வீட்டில் சோனியா நிருபர்களிடம் பேசுகையில், மன்மோன சிங்கை பொறுத்த வரை அவர் சர்வதேச அளவில் ஒருமைப்பாட்டுக்கு உதாரணமாக விளங்குபவர், அவர் நேர்மையானவர், நாணயமிக்கவர். அவருக்கு வந்துள்ள அழைப்பாணை காரணமாக நாங்கள் வருத்தப்படுகிறோம். அவருக்கு நாங்கள் எங்களின் உறுதியான ஆதரவை தெரிவிக்க இங்கு வந்துள்ளோம். அவருக்கு முழு துணையாக இருப்போம். சட்டபூர்வமாக எதையும் சந்தித்து வெற்றி பெறுவோம். அவர் குற்றமற்றவர் என நிரூபிப்போம் என்றார். (இ-5)

## தொலைக்காட்சி அலுவலகத்தின் மீது மர்ம நபர்கள் குண்டு வீசி தாக்குதல்

ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள புதிய தலைமுறை தொலைக்காட்சி அலுவலகம் மீது மர்ம நபர்கள் 2 டிபன் பொக்ஸ் குண்டுகளை வீசிய சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு சில தினங்களுக்கு முனனா் அத்தொலைக்காட்சி தாலி பெண்களைப் பெருமைப்படுத்துகிறதா? அல்லது சிறுமைப்படுத்துகிறதா? என்ற தலைப்பில் விவாத நிகழ்ச்சியை ஒளிபரப்ப இருந்தது.

இதை ஏற்றுக்கொள்ள முடியாமல் சில அமைப்புக்களை சேர்ந்தவர்கள் அந்த தொலைக்காட்சி அலுவலகத்தின் முன் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அதை படம்பிடிக்க வந்த அந்த தொலைக்காட்சியை சேர்ந்த ஒளிப்பதிவாளர் மீது கண்மூடித்தனமாக அந்த அமைப்பினர் தாக்குதல் நடத்தினர். இந்த சம்பவத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல அரசியல் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்து இருந்தனர்.


இந்நிலையில், நேற்று அதிகாலை சுமார் மூன்று மணியளவில அந்த தொலைக்காட்சி அலுவலகத்தை சில மர்ம நபர்கள் நோட்டமிட்டபடி இரு சக்கர வாகனத்தில் சுற்றி வந்துள்ளனர். அப்போது, திடீரென அந்த அடையாளம் தெரியாத மர்ம நபர்கள், 2 டிபன் பொக்ஸ் வெடி குண்டுகளை தொலைக்காட்சி அலுவலகத்தின் மீது வீசிவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

இதுகுறித்து பொலிஸாருக்கு புகார் அளிக்கப்பட்டது. உடனே சம்பவ இடத்திற்கு வெடிமருந்து நிபுணர்களுடன் விரைந்து வந்த பொலிஸார், டிபன் பொக்ஸ் வெடி குண்டுகளை வீசிய மர்ம நபர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வெடி குண்டு தாக்குதல் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ள காட்சியின்படி, அலுவலகத்தினை நோட்டமிட்டபடி, இரு சக்கர வாகனங்களில் சென்ற சிலர், சில நிமிடங்களில் திரும்பி வந்து, நுழைவு வாயிலின் அருகே நின்றனர்.

பின்னர் அடுத்தடுத்து இரண்டு டிபன் பொக்ஸ் குண்டுகளை வீசிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர். அடையாளம் தெரியாத இந்த நபர்கள் வீசிய குண்டுகள் அலுவலக நுழைவு வாயில் பகுதியில் வெடித்தன. குண்டு வீச்சு சம்பவம் குறித்து உடனடியாக கிண்டி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், தடயங்களை சேகரித்தனர். கண்காணிப்புக் கமராவில் பதிவான காட்சிகளையும் பொலிஸார் ஆய்வு செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



## தாக்குதல் நடந்தது ஏன்? சரணடைந்தவரின் பேட்டி

சென்னையில் உள்ள தனியார் தொலைக்காட்சி நிறுவனமான புதிய தலைமுறை அலுவலகத்தின் மீது குண்டு வீசிய சம்பவத்தில் இந்து இளைஞர் சேனா அமைப்பைச் சேர்ந்த மாநிலத் தலைவர் ஜெயம் ஏ. பாண்டியன் மதுரை 6 ஆவது நீதவான் நீதிமன்றத்தில் நேற்று காலை சரணடைந்தார். அப்போது, செய்தியாளர்களிடம் ஜெயம் ஏ. பாண்டியன் கூறியதாவது,

புதிய தலைமுறைத் தொலைக்காட்சியில் இந்துக்களின் தாலி பற்றி விவாதம் நடத்துவதை நிறுத்துமாறு போராட்டம் நடத்தினோம். ஆனாலும் அதனை தொடர்ந்து நியாயப்படுத்தும் வகையில் காட்சிகளை ஒளிபரப்பினார்கள்.

இதற்காக பெண்களிடம் அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும். அதற்காகவே, எங்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் புதிய தலைமுறை அலுவலகம் மீது பட்டாசு வசினார்கள் என்று கூறியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மார்ச் 16 முதல் 22 வரை ஏக்கர் வரிவாரம் பிரகடனம்

ஒட்டுசுட்டான் ஒலுமடு கமநல சேவை நிலையத்தினரால் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஏக்கர் வரி வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக மாங்குளம் வடக்கு கமக்கார அமைப்பின் தலைவர் ச.கயன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட அனைத்து விவசாயிகளும் ஏக்கர் வரிவாரத்தில் ஏக்கர்வரிகளைக்கட்டிமுடிக்கவேண்டும். இதனை மையமாகக் கொண்டே அனைத்து உள்ளீடுகளும் வழங்கப்படும்.

இதேவேளை: முல்லைத்தீவு மாவட்ட உதவி ஆணையாளரினால் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சிறுபோக உரமானியம் தொடர்பான கலந்துரையாடலொன்று ஒலுமடு கமநல சேவை நிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கமக்கார அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள், விவசாயிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மாங்குளம்வடக்குகமக்கார அமைப்பிற்குட்பட்டவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 12.30 மணிவரை மாங்குளம் பொது நோக்கு மண்டபத்திற்கு கடந்த வருடம் செலுத்திய பற்றுச்சீட்டுடன்வருகை தந்து ஏக்கர் வரியை செலுத்து மாறும் அன்றையதினம் செலுத்தத் தவறின், எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரையான காலப்பகுதிக்குள் ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்கு சென்று செலுத்த வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் இது தொடர்பான நிகழ்வு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2-281)




# உப-உணவுப் பயிர்ச் செய்கைக்கு குளத்துநீர் திறந்துவிடப்படவில்லை

## நெருக்கடியில் விவசாயிகள்

கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அக்கராயன் குளத்தின் கீழ் உப-உணவு பயிரிடும் கண்ணகைபுரம் கிராம விவசாயிகளுக்கு இதுவரை மேற்படி குளத்து நீர் திறந்து விடப்படாமையால் உப-உணவு செய்கை மேற்கொள்வதில் பாரிய சிக்கல்களை எதிர்கொள்வதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கண்ணகைபுரம் கிராமத்தில் உப-உணவு செய்கையானது படித்த வாலிபர் திட்டமாக 1975 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைய ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதியில் இருந்து ஓகஸ்ட்மாதம் வரை உப-உணவு செய்கை பண்ணப்பட்ட நிலங்களுக்கு அக்கராயன் குளத்தில் இருந்து நீர் திறந்து விடப்பட்டு நீர் பாய்ச்சும் நடவடிக்கை வழமையாக இருந்து வந்தது.

இவ் வருடம் இன்று வரை நீர் விநியோகம் நடைபெறாமையால் உப-உணவு பயிரிடும் அனைத்து விவசாயிகளும் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அக்கராயன் நீர்ப்பாசனத் திணைக்கள அதி காரிகளுக்கு பாதிக்கப்பட்ட விவசாயிகளால் தெரியப்படுத்தப்பட்டும் எது விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை அப்பகுதி விவசாயிகள் நேரில் சென்று துறை சார்ந்த அதிகாரிகளிடம் கேட்டபோது,

இதுவரையில் இவ் வருடத்துக்கான இத்திட்டம் தொடர்பான கூட்டம் நடைபெறவில்லையெனவும் கூட்டம் நடைபெற்ற பின்னர் நீர் விநியோகம் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே உரியவர்கள் காலம் தாழ்த்தாது கூட்டத்தை நடத்தி நீர் விநியோகத்தை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-284)

# அக்கராயன் குள புனரமைப்புக்கு ஆயிரம் மில்லியன் ரூபா தேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தை முழுமையாக புனரமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதா கரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமாகிய இரணைமடு குளத்துக்கு அடுத்த பெரிய குளமாக அக்கராயன் குளம் இருக்கின்றது. இதன்கீழ் 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும். குளத்தின் 6 வாய்க்கால்கள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிக்கையில்,

ஜப்பான் அரசின் 350 மில்லியன் ரூபாய் நிதியுதவியில் குளத்தின் அணைக்கட்டு மற்றும் வான் பகுதிகள் என்பன கடந்த 2010 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டன.

குளத்தை முழுமையாக புனரமைப்பதற்கு இன்னும் ஆயிரம் மில்லியன் ரூபாய் தேவை. நிதிக்கான கோரிக்கைகளை விடுத்துள்ளோம். நிதி கிடைக்கின்றபொது குளத்தை முழுமையாக புனரமைக்க முடியும் என்றார். (அ-2)

# பிரதமர் மோடியின் வருகைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

(மன்னார்)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் மன்னார் விஜயத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், "இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய பிரதமர், நாளை சனிக்கிழமை முறபகல் 11 மணிக்கு தலைமன்னார் துறை புகையிரத நிலையத்துக்கு வருவார்" "தலைமன்னார் துறை புகையிரத நிலையத்தில் இருந்து கொழும்புக்கான புகையிரத சேவையை ஆரம்பித்து வைப்பார்.

அதுமட்டுமன்றி தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்துக்கான படகு சேவை ஆரம்பிப்பது குறித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்நிலையில், இந்திய பிரதமரின் மன்னார் விஜயத்துக்கான சகல அடிப்படை வசதிகளும் பூர்த்தியடைந்துள்ளன. பொலிஸ் அதிகாரிகள், பாதுகாப்பு படையினர், அரசியல்வாதிகள், உயரதிகாரிகளுடன் இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளன" என்றும அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



கிளிநொச்சி மாவட்ட செயலகமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை நேற்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் கிளி/மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தினர். இதன்போது நடைபெற்ற நிகழ்வினை படங்களில் காணலாம். (படங்கள்:- கிளிநொச்சி-1 செய்தியாளர்)

# திருட்டு போனது மோ.சைக்கிள்

வவுனியா, குருமன்காடு புகையிரத பாதையருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டர் சைக்கிளை புகையிரத பாதையருகில் நிறுத்திவிட்டு சென்றவர் மீண்டும் வந்து பார்த்த போது அவ்விடத்தில் மோட்டார் சைக்கிளை காணவில்லை. சூட்சுமமான முறையில் பூட்டை உடைத்து குறித்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் தம்மிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாகவும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-2-250)

# பதவி வெற்றிடங்களை நிரப்ப அனுமதி கிடைக்கவில்லை

## பிரதேச சபைகள் கவலை

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு ஆகிய இரு பிரதேசசபைகளின் கீழ் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் மேற்படி பிரதேச சபைகளிடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது அவலப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி மக்கள் தமது தேவைகளின் நிமிர்த்தம் பிரதேசசபைகளின் சேவைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அணுகும் போது அவர்களது சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் இதற்கு ஆளணிப் பற்றாக்குறையே காரணம் எனவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதனால் மக்களின் பண விரயத்துடன் காலநேரமும் வீணாகுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் பிரதேசசபையுடன் தொடர்பு கொண்டு வினவியபோது,

அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சையும் நடைபெற்று ஒவ்வொரு பிரதேச சபைக்குரிய தெரிவு செய்யப்பட்டவர்களுடைய விபரங்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் உதவி ஆணையாளரும் ஆணையாளரின் அனுமதிக்காக அனுப்பி வைத்து வருடக்கணக்காகின்றது. இதுவரை ஆளுநரின் அனுமதி கிடைக்காமையால், ஆளணி பற்றாக் குறையை நிரப்ப முடியாதுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடமாகாணத்திலுள்ள 14 பிரதேச சபைகளுக்குரிய அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்குரிய அனுமதிக்காக பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை அனுமதி கிடைக்கவி ல்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் இவ் விடயம் தொடர்பாக கவனமெடுத்து பிரதேசசபைகளுக்கான ஆளணியை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனபொதுமக்களும்பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-15)

# துணுக்காய் கல்வி வலயத்தில் 6 அதிபர்களுக்கு பதவியுயர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் ஆறு பேருக்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தினால் கடந்த 10 ஆம் திகதி கொழும்பு றோயல் கல்லூரியில் வைத்து அதிபர் தரம்-1 இற்கான பதவியுயர்வு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நீண்ட காலத்தின் பின்னர் நாடு தழுவிய ரீதியில் ஆயிரத்து 112 அதிபர்களுக்கு தரம் 1 இற்கான பதவி உயர்வு கடிதங்களை கல்வி அமைச்சின் அகிலவிராஜ் காரியவம்ச கடந்த 10 ஆம் திகதி கொழும்பு றோயல் கல்லூரியில் வைத்து வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் எமது கல்வி வலயத்தின் கீழுள்ள மு/அனிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலய அதிபர் கு.ஜெகதீஸ்வரன், மு/விநாயகர்புரம் அ.த.க.பாடசாலை அதிபர் சு.சத்தியசீலன், மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலய அதிபர் த.அருமைநாயகம், மு/பாலிநகர் மகாவித்தியாலய அதிபர் திருமதி. யோகராணி தில்லையம்பலம், மு/மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் து.யேசுதாணந்தன், ஒட்டுசுட்டான்கோட்டக்கல்வி அதிகாரி த.பங்கயன் செல்வன் ஆகிய 6 அதிபர்களுக்கு தரம்-1 இற்கான பதவியுயர்வுக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பௌத்த பிக்குகள் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

**ஆராச்சிக்கட்டுப் பகுதியில் தொழிற் சாலை நிர்மாணிக்க வேண்டாம் எனக் கோரி பௌத்த பிக்குகள் தொடர்ந்து ஒன்பதாவது நாளாக நேற்றும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.**

புத்தளம் ஆராச்சிக்கட்டுப் பிரதேச சபைக்குட்பட்ட புத்தளம்-சிலாபம் பிரதான வீதியின் ஆனைவிழுந்தாவப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள வீட்டுக் கூரைத் தகடு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை தடுத்து நிறுத்துமாறு கோரி தொழிற்சாலைக்கு முன்பாக நேற்று ஒன்பதாவது நாளாக சத்தியாகிரகப் போராட்டத்தில் பௌத்த பிக்குகள் உட்பட பொதுமக்கள் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரிவுபசார விழா



வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆறுமுகம் ராஜேந்திரனின் பிரிவுபசார விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியில் கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் செ.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுகன், கரவெட்டி பங்குத்தந்தை அன்ரன் அமல்ராஜ் அடிகளார் ஆகியோர் வழங்கவுள்ளனர். வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா, செயலாளர் சி.சத்தியசீலன், வடக்குமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உட்பட பலர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், யாழ்.பல்கழைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் க.சின்னத்தம்பி, யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா மற்றும் பலர் நயப் புரைகளை வழங்கவுள்ளனர். (இ-3)

## அதிபர்களுக்கான அறிவுறுத்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கத்தினால் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள அதிபர்களுக்கான வினைதிறன் தடைதாண்டல் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்க விரும்பும் அதிபர்கள் மேற்படி அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் ச.பூலோகராஜாவிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2)

◆◆◆◆◆◆◆◆◆◆◆

## ஆன்மீக நிழல்

இனங்களின் மத்தியில் நல்லுறவை வளர்ப்பதற்கென ஆன்மீகநிழல் அமைப்பினால் தமிழ் கலை நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரரின் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் நிரோஷா விராஜினி, தீபிகா பிரியதர்சினி பீரிஸ்மேரி நவரத்னம், ரி.உதயமலா உள்ளிட்ட சிங்கள மற்றும் தமிழ் பாடகர்களும்பாடகிகளும்பாடல்களை பாடவிருக்கும் இந்த நிகழ்வில் தமிழ் கலைஞர்கள் பங்களிப்புடனான லங்காபாண்ட் இசைக்குழு இசையை வழங்கவுள்ளது. (இ-3)

## குவைத்தில் உயிரிழந்த யுவதியின் சடலத்தை இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை

குவைத் நாட்டில் உயிரிழந்த மட்டக்களப்பைச் சேர்ந்த யுவதியின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுககப்பட்டுள்ளதாக உயிரிழந்த யுவதியின் குடும்ப உறவினர்கள் தெரிவித்தனர். மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் மூன்றாம் குறுக்குத்தெருவில் வசித்து வந்த சோமசுந்தரம் சர்நீதியா (வயது- 22) எனும் யுவதியே குவைத்தில் உயிரிழந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது. குறித்த யுவதி கடந்த நான்கு மாதத்திற்கு முதல் குவைத் நாட்டிற்கு சென்றிருந்தார். இந்த யுவதியை காத்தான்குடியைச் சேர்ந்த உப முகவர் ஒருவரின் ஊடாக, கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் குவைத்துக்கு அனுப்பியிருந்தார். இந்த யுவதி கடந்த முதலாம் ஆம் திகதி அன்று அவர் வேலை செய்த வீட்டில் உயிரிழந்துள்ளார். இவரைப்பற்றி கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக தகவல் எதுவுமில்லாததால் இந்த யுவதியின குடும்ப உறவினர்கள் மட்டக்களப்பு பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 100 | 80-100 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 60 | 100 | 90-100 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 80 | 80 | 50 | 60 |
| தக்காளி | 40 | 50 | 70 | 50 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 60 | 40 | 50 |
| கோவா | 30 | 80 | 60 | 60 | 40 | 40 |
| கரட் | 120 | 100 | 100 | 120 | 100-120 | 90 |
| பூசணி | 60 | 50 | 40 | 60 | 60 | 60 |
| புடோல் | 40 | 50 | 60 | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 100 | 80 | 60 | 80 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 70 | 80-100 | 60-80 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 60 | 80 | 70-80 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 70 | 80 | 60 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 | 100 | 30-50 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 80 | 50 | 60 |
| பயற்றங்காய் | 100 | 60 | 50 | 120 | 70-80 | 80 |
| லீக்ஸ் | 200 | 140 | 120 | 200 | 160 | 150 |
| பீற்றூட் | 60 | 50 | — | 80 | 60 | 40 |
| கறிமிளகாய் | 200 | 120 | 100 | 140 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 160 | 200 | 150-200 | 400 |
| போஞ்சி | 200 | 120 | 70 | 200 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | — | 80 | 50 | 80 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 30 | 50 | 50 | 40 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 28-70 | 50 | 50 | 40-50 | 60 | 60 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 90 | 100 | — | 160 | 80 | 100 |
| முள்ளங்கி | 20 | 20 | — | 30 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 50 | 60 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 309

துர்க்கா துர்க்காயினி




சரவணன் சுகுமார்





சிந்து சிந்துஜா




துளசி துளசிகா




கஜன் கஜமுகன்



கண்ணன் ராதாரவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுமா பிரதமரின் வருகை?

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணம் தமிழர்கள் வரலாற்றில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு தமிழகத்தில் நிலவுகிறது. இதற்கு முன்பு இருந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் சார்பில் எவ்வளவு உறுதிமொழிகள் கொடுத்தாலும், அது எல்லாம் இலங்கை அரசால் காப்பாற்றப்படவில்லை என்ற எண்ணம் தமிழக மக்களிடம், குறிப்பாக இங்குள்ள அரசியல் கட்சிகளிடம் நிலவிவருகிறது.

இது மாதிரி சூழ்நிலையில் இன்று தொடங்கும் இந்திய பிரதமரின் பயணத்தில் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு, இருநாட்டு மீனவர் பிரச்சினைகள், இந்தியாவின் நிதியுதவியில் நடக்கும் தமிழர்கள் நலத்திட்டங்கள் எல்லாவற்றிலும் ஒரு திருப்புமுனை ஏற்படும் என்று கருதுகிறார்கள்.

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ச தோல்வியடைந்ததற்கு பின்னர் தமிழகத்தில் இலங்கை அரசின் மீதோ, இலங்கை அரசியல்வாதிகள் மீதோ "உணர்வு பூர்வ" எதிர்ப்புகள் தமிழகத்தில் குறைந்தே வருகின்றன.

ஆனால், இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அளித்த "மீன்வர்கள் கரை கடந்தால் சுடுவோம" என்ற பேச்சு மீண்டும் இலங்கை அரசியல்வாதிகள் மீதான எதிர்ப்புக்கு தமிழகத்தில் அச்சாரம் போட்டிருக்கிறது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்ற பிறகு பாரதப் பிரதமர் நரேந்திரமோடிக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்டு வரும் புதிய நட்பு தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண உதவும் என்ற நம்பிக்கை தமிழக மக்கள் மத்தியில் நிலவுகிறது.

குறிப்பாக வெற்றி பெற்றவுடன் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியா வந்தது, சீனாவின் திட்டத்தை நிறுத்தி வைத்தது, மோடி இலங்கைக்குச் செல்வது எல்லாம் ஏற்கனவே உருவாகிய சுமூக சூழ்நிலைக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைந்திருந்தது.

அதில் "கல் வீசி" கலாட்டா செய்தது திடீரென்று வெளிவந்த இலங்கை பிரதமரின் பேட்டிதான். இத்தனைக்கும் ரணில், தமிழர்களின் நண்பர் என்று தமிழ்நாட்டில் கருதப்படும் அரசியல் தலைவர. அவரிடமிருந்து இப்படியொரு பேட்டியை தமிழக மக்களோ, மீனவர்களோ சற்றும் எதிர்பார்க்கவிலலை.

"இலங்கை அரசியல்வாதிகளைக் குறை கூறும் நிலைப்பாட்டிலிருந்து" பெருவாரியான கட்சிகள் விலகிச் சென்றுகொண்டிருந்த நேரத்தில் வெளிவந்த ரணில் பேட்டி, மீண்டும் தமிழக அரசியல் கட்சிகளை இலங்கை அரசியல்வாதிகளை குறை கூறும் நிலைக்குத் தள்ளிவிட்டது.

இது ஒரு புறமிருக்க, தமிழக கட்சிகளின் முக்கியக் குறி இப்போது பா.ஜ.க.தான். "காங்கிரஸும் ஒன்றும் செய்யவில்லை. பா.ஜ.க.வும் ஒன்றும் செய்யவில்லை" என்று கருதும் பல அரசியல் கட்சி தலைவர்கள் முன்பு பெருந்தலைவர் காமராஜ் தி.மு.க., அ.தி.மு.க. பற்றிக் கூறியதுபோல், பா.ஜ.க.வும், காங்கிரஸும் இலங்கை தமிழர் விவகாரத்தில் "ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்" போன்றவைதான் என்ற எண்ணம் தமிழக மக்கள் மத்தியில் விதைக்கப்படுகிறது.

தமிழக மீனவர்கள் ஐவரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்தது, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும்போது அவர்களை உடனுக்குடன் மீட்டது போன்ற நல்லெண்ண நடவடிக்கைகளை பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு சாதித்த போதிலும், தமிழக மீனவர்களின் படகுகளை திரும்ப ஒப்படைக்காத சூழ்நிலையும், தமிழக மீனவர்களின் கைது நிற்காததும், பிரதமரின் சுற்றுப் பயணத்திற்கு முன்பு வெளிவந்த ரணில் பேட்டியும் தமிழகத்தில் உள்ள கட்சிகளை பா.ஜ.க. மீதும் கோபம் கொள்ள வைக்கிறது.

இந்தக் கோபத்துக்கு இலங்கை தமிழர் பிரச்சினை தவிர இன்னொரு முக்கியக்காரணமும் உண்டு. பா.ஜ.க. தமிழகத்தில் அரசியல் ரீதியாக மூன்றாவது சக்தியாக உருவாக எடுக்கும் முயற்சிகள் இங்குள்ள கட்சிகளை மிரள வைக்கிறது. சமீபத்தில்கூட, மூன்றாவது முறையாக பா.ஜ.க. தலைவர் அமித்ஷா தமிழ்நாடு வந்து சென்றுள்ளார். இந்த முறை "தேர்தல் முறைகேட்டில் தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது" என்று இடித்துரைத்து விட்டுச் சென்றுள்ளார்.

இந்த சூழ்நிலையில் பா.ஜ.க. தமிழக அரசியலில் முழு வீச்சில் வந்தால் அப்போது அந்தக் கட்சியை சமாளிக்க "இலங்கை தமிழர் பிரச்சினை" உதவும் என்ற நினைப்பில் இப்பிரச்சினையை அப்படியே வைத்திருக்கிறார்கள். தி.மு.க.வின் செயற்குழுக் கூட்டம் கடந்த மார்ச் 5 ஆம் திகதி நடைபெற்றது. அதில் ஒரு தீர்மானத்தில், "இலங்கை தமிழர் பிரச்சினை பற்றிய தன் நிலைப்பாட்டை பா.ஜ.க. அரசு வெளிப்படுத்த வேண்டும்" என்றும், இலங்கை செல்லும் பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து நிரந்தர தீர்வு காண பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும், அந்த பேச்சுவார்த்தை முடிவுக்கு வரும் வரை தற்காலிகமாக "தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்" என்றும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் சுற்றுப் பயணத்துக்கு முன்னோட்டமாக இலங்கை வந்த வெளியுறவுத் துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், "இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினை மனிதநேயத்துடன் அணுக வேண்டிய பிரச்சினை" என்று இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடமே கூறியிருப்பது இங்கே கூர்ந்து கவனிக்கத்தக்கது.

இதுமட்டுமல்ல, இன்னொரு முக்கியக் கட்சியான, அதுவும் தமிழகத்தை ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வும் இப்பிரச்சினையில் தன் கருத்தை இந்திய நாடாளுமன்றத்திலேயே பதிவு செய்திருக்கிறது. அதன் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர். சுந்தரம், "தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது" "இலங்கை தமிழர்களுக்கு சுயாட்சி அமைக்க வழி அமைத்துக் கொடுப்பது" "கச்சதீவை மீட்பது" உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருக்கிறார்.

அதைவிட இன்னொரு மூத்த ராஜ்யசபை உறுப்பினரான டாக்டர் மைத்ரேயன் ராஜ்ய சபையில் பேசும போது, "தமிழக மீனவர்கள் பிரச்சினை பற்றியோ, ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பது பற்றியோ குடியரசுத் தலைவர் உரையில் இல்லாதது மிகவும் துரதிருஷ்டவசமானது.

பிரதமர் நரேந்திர மோடி கூட்டாட்சித் தத்துவத்தில் ஆர்வம் உடையவர். அந்த கூட்டாட்சித் தத்துவத்தின் நோக்கத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். அண்டை நாடுகள் உறவில் பிரதமருக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, அதே போல் ஈழத் தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

சமத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதில் தமிழக மக்கள் கவலை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதனால் எங்கள் மக்கள் முதல்வரை (முன்னால் முதல்வர் ஜெயலலிதாவை) கலந்து ஆலோசித்துவிட்டு பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்குச் செல்வார் என்று நான் நம்புகிறேன்" என்று பேசிய அவர், "நீதி என்று நான் இங்கே குறிப்பிடுவது இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திரமான பன்னாட்டு விசாரணை நடைபெற இந்தியா இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனாலும் இப்படியெல்லாம் பேசி விட்டு குடியரசுத் தலைவர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் "கருப்புப் பண விவகாரத்தில் அரசை குறை கூறி எதிர் கட்சிகள் கொண்டு வந்த திருத்த தீர்மானத்துக்கு" எதிராக வாக்களித்து, பா.ஜ.க.வுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தது அ.தி.மு.க. இதற்கு தி.மு.க.வும் சற்றும் சளைத்ததல்ல.

இலங்கை தமிழர் பிரச்சினையில் தி.மு.க. ராஜ்ய சபை உறுப்பினர் திருச்சி சிவாவும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது, அவர்களுக்கான நிரந்தர தீர்வு குறித்து குடியரசுத் தலைவருக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தின்போது ஒரு திருத்தம் கொடுத்திருந்தார்.

ஆனால், நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி "அண்டை நாடுகளுடன் நட்புறவாக இருக்க விரும்பும் அதே நேரத்தில் நம் உரிமைகள் எதையும் சரண்டர் செய்ய மாட்டோம்" என்று கூறினார். பிறகு இந்த திருத்த தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடுவதா வேண்டாமா என்று பேச்சு எழுந்த போது "பிரதமரின் பேச்சில் நம்பிக்கை வைத்து என் திருத்தத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்" என்று அறிவித்தார் திருச்சி சிவா. இப்படி அ.தி. மு.க., தி.மு.க. இரண்டுமே இலங்கை தமிழர் பிரச்சினையை முன் வைத்து பா.ஜ.க.வுடன் முட்டி மோதி னாலும், ஒரு கட்டத்தில் இரு கட்சிகளுமே "கடும் எதிர்ப்பு" தெரிவிப்பதிலிருந்து விலகியே நிற்கின்றன.

இதற்கிடையில் இலங்கையில் ராஜீவ்- ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின்படி வந்த 13 ஆவது அரசியல் சட்ட திருத்தத்தின்படி தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதில் எங்களுக்கு சம்மதமே என்று நாடாளுமன்ற விவகாரக்குழு அமைச்சர் வெங்கைய்யா நாயுடு பேட்டி அளித்திருப்பது பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை மற்றும் யாழ்ப்பாண விஜயம் பற்றிய நம்பிக்கையை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறது.



தமிழகத்தில் உள்ள கட்சிகளும "தமிழக அரசியலை" மனதில வைதது களம் காணும் பாரதீய ஜனதாக் கட்சி இலங்கை தமிழர்களுக்கு எது மாதிரியான நிவாரணத்துக்கு வழி அமைத்துக் கொடுத்து, தமிழக வாக்காளர்களை கவரப் போகிறது என்ற கவலையில் இருக்கின்றன என்பதுதான் தற்போதையை நிலைமை! வழக்கம் போல் இலங்கையில் உள்ள தமிழர்களும், தமிழக்த்தில் உள்ள மீனவர்களும் "இந்திய பிரதமரின் விஜயத்தால் கிடைக்கப் போகும்" நன்மைகளை வழி மேல் விழி வைத்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்ட நெற்செய்கையில் கபிலநிறத்தண்டு தத்தியின் தாக்கம்





(மன்னார்)

தற்போது நிலவுகின்ற கடும் உஷ்ணத்துடன் கூடிய கால நிலையானது பீடைத்தாக்கத்தை அதிகரிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான காலநிலை மாற்றத்தின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் தற்போது நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள சகல விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் கபிலநிற தண்டு தத்தியின் தாக்கம் பரவலாக இனங்காணப்பட்டுள்ளது. இப்பீடைத்தாக்கம் விவசாயிகளின் வருமானத் தையும் குறைவடையச் செய்வதாகவுள்ளது என மன்னார் மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலக பாட விடய உத்தியோகத்தர்களான க.மதனராஜ் குளாஸ், எஸ்.எப். சி.உதயச்சந்திரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் கூறியவை வருமாறு.

மன்னார் மாவட்டத்தில் காலபோகத்தில் 20 ஆயிரத்து 814 ஹெக்ரேயர் நிலப்பரப்பிலும், சிறுபோகத்தில் 3 ஆயிரத்து 25 ஹெக்ரேயர் நிலப்பரப்பிலும் நெற்செய்கை செய்யப்படுகின்றது.

இவ்வாறாக மேற்கொள்ளப்படும் நெற்செய்கையில் ஏற்படும் பீடைகளின் தாக்கத்தை கட்டுப்படுத்தல் என்பது விவசாயிகளுக்கு ஒரு கடினமான செயற்பாடாக அமைவதுடன் இப்பீடைத் தாக்கம் விவசாயிகளின் வருமானத்தையும் குறைவடைய செய்வதாகவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள சகல விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் சுமார் 1500 ஏக்கர் பரப்பளவில் கபிலநிற தண்டு தத்தியின் தாக்கம் பரவலாக இனங் காணப்பட்டுள்ளது. முக்கியமாக உயித்தராசன்குளம், பாப்பாங்குளம், பெரியகட்டைக்காடு, வஞ்சியங்குளம், காத்தாங்குளம், கற்கிடந்த குளம், பரிகாரிகண்டல், ஆண்டாங் குளம், அடம்பன்தாழ்வு, வேப்பங்குளம் ஆகிய கிராமங்களில் அதிகளவில் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது.

**கபில நிற தண்டு தத்தி தாக்கத்தின் முக்கியத்துவம்**

இக்கபிலநிற தண்டுதத்தியின் தாக்கம் ஏற்படுவதற்கான பிரதான காரணிகளாக அதிகளவான பயிர் அடர்த்தி, அளவுக்கதிகமான யூறியா பசளை பாவனை, பயிர் செய்யப்பட்டுள்ள வயலிலுள்ள மரநிழல்கள் அல்லது சிறிய பற்றைக்காடுகள் என்பனவற்றை குறிப்பிடலாம்.


கபில நிற தண்டு தத்தியானது குறை உருமாற்றத்தை கொண்ட ஒரு பூச்சி பீடை இனமாகும். இதன் வாழ்க்கை வட்டம் முட்டை, அணங்கு, நிறைவுடலி என மூன்று பருவ நிலைகளை கொண்டுள்ளது. இம் மூன்று நிலைகளும் 14 நாட்களுள் நடைபெறுகின்றது.

நிறை உருமாற்றத்தை கொண்டுள்ள பூச்சி பீடைகளானது முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறைவுடலி என நான்கு பருவ நிலைகளை கொண்டுள்ளது. பூச்சி பீடைகளின் வாழ்க்கைவட்டம் 21 நாட்களில் நடைபெறுகின்றது. எனவே குறையுருமாற்றத்தை கொண்டுள்ள பீடைகளானது நிறையுருமாற் றத்தை கொண்டுள்ள பீடைகளை விட விரைவில் இனம் பெருகுவதுடன், பெரும்பாலான பூச்சி பீடைகள் தமது வாழ்க்கைக்காலத்தில் ஒருபகுதியிலேயே பயிருக்கு சேதம் விளைவிக்கின்றன. ஆனால் கபில நிற தண்டு தத்தியானது அணங்கு, நிறைவுடலி ஆகிய இரு பருவங்களிலும் பயிரை தாக்கவல்லது. எனவே ஏனைய பீடைகளைவிட அதிகளவில் பயிருக்கு சேதத்தை விளைவிக்கின்றது. இவற்றிலும் அணங்கு பருவமே பயிருக்கு அதிகளவில் சேதம் விளைவிப்பதாக காணப்படுகின்றது.

**தாக்கத்தை அடையாளம் காணல்**

தாக்கப்பட்ட வயலினை அவதானிக்கும் போது ஆங்காங்கே சில பகுதிகளில் பயிர்கள் எரிந்து காணப்படுவது போன்று தோற்றமளிக்கும்.

இவ்வாறான வயலிலுள்ள பயிர்களின்அடிப்பகுதியைகையால் பிரிக்கும் போது பயிரின் அடிப் பகுதியில் அல்லது நீர் மட்டத்தில் அதிகளவான கபில நிற தண்டு தத்திகளின் நிறைவுடலியும், அணங்கும் காணப்படுவதை அவதானிக்கலாம். அத்துடன் நீரில் பெருமளவான அணங்குகளின் தோல் கவசங்களும் மிதப்பதை காணக்கூடியதாகவிருக்கும்.



| வர்த்தகப் பெயர் | ஏக்கர்ஒன்றிற்கு தேவையான அளவு | 16 லீற்றர் தாங்கி ஒன்றிற்கு தேவையான அளவு |
|---|---|---|
| அப்லோட் | 77 - 99 கிராம் | 9 கிராம் |
| றிமோன் | 130 – 160 மில்லி லீற்றர் | 16 மில்லி லீற்றர் |
| அட்மயர் | 65 – 80 மில்லி லீற்றர் | 8 மில்லி லீற்றர் |
| றிஜன்ற் | 192 – 240 மில்லி லீற்றர் | 23 மில்லி லீற்றர் |
| மொஸ்பிலன் | 130 – 160 கிராம் | 16 கிராம் |
| அக்ரா | 38 – 48 கிராம் | 5 கிராம் |
| புறவாடோ | 20 – 24 கிராம் | 2.5 கிராம் |
| ஹேபிக்ஸ் | 192 – 240 மில்லி லீற்றர் | 43 மில்லி லீற்றர் |
| ஏபிசக்ட் | 320 – 400 கிராம் | 40 கிராம் |

**தாக்கத்தை கட்டுப்படுத்துதல்**

கபில நிற தண்டு தத்தியின் தாக்கத்திற்கு உட்பட்ட வயலில் இருந்து ஏனைய வயல்களுக்கு இத் தாக்கம் பரவாமல் தடுக்கும் வண்ணம் முதலில் மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாட்டு முறைகள்

வயலிலுள்ள நீரினை முற்றாக வடியவிடல் வேண்டும். ஏனெனில் இக் கபில நிற தண்டு தத்தியானது நீரின் மூலமே பரவும் தன்மையை கொண்டதாகும்.

எதிர்ப்பினம் பயிரிடல் ( Bg 300. இது 3மாத வெள்ளைநாடு இனம்)

சிபாரிசு செய்யப்பட்டுள்ள விதை நெல் அளவை பயன்படுத்தல் (ஏக்கர் ஒன்றிற்கு சம்பா இனமாயின் 2 புசலையும், ஏனைய இனங்கள் 2.5 புசலையும் பயன்படுத்தல்)

கண்டத்தில் ஒரே நேரத்தில் விதைத்தல் மற்றும் அறுவடை செய்தல் பிந்திய விதைப்பினை தவிர்த்தல் அதிகளவு யூரியா பாவனையை தவிர்த்தல்

தாக்கப்பட்டவயல்களை இரண்டு மீற்றர் அகலம் கொண்ட சால்களாக பிரித்து பின்வரும் சிபாரிசு செய்யப்பட்ட பூச்சி நாசினிகளுள் ஒன்றை உடனடி யாக விசிற வேண்டும். பாதிக்கப் பட்ட பயிருக்கு பூச்சி நாசினி விசிறும் போது பயிரின் அடிப் பகுதி நன்கு நனையும் வண் ணம் பூச்சி நாசினியை விசிறு தல் வேண்டும். அத்துடன் பூச்சி நாசினி விசிறுவதற்கு வலு தெளி கருவியை பயன்படுத்துதல் சிறந்த தாகும். (அ-2)

## சமுர்த்தி வங்கி திறந்து வைப்பு

(மல்லாவி)

சமுர்த்தி அதிகார சபையின் 30 இலட்சம் ரூபா செலவில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நகர பகுதியில் சமுர்த்தி வங்கி யொன்று புதிதாக அமைக்கப்பட்டு கடந்த 9ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலனினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வங்கி திறந்து வைக்கப்பட்டதன் மூலம் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உள்ள 20 கிராம சேவை யாளர் பிரிவுகளிலும் சமுர்த்தி உதவி பெற்று வருகின்ற ஆயிரத்து 716 பய னாளிகள் நன்மை அடைவார்கள் எனதெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-15)



ஒட்டுசுட்டான் இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தின் வேண்டுகோளிற்கிணங்க இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தாய், தந்தையை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 15 மாணவர்களுக்கான பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது... (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)




## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சிஇரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்மன் பெருங்கோயில் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோயிலின் பல்சேவை மண்டபத்தில் தலைவர் எஸ்.என்.செல்வராசா தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதுடன் கோயிலின் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

எனவே உபயகாரர்கள், கோயில் அங்கத்தவர்கள், பெரும் திருவிழா உபயகாரர்கள், தொண்டர்கள், பக்த அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு கருத் துக்களை வழங்குமாறு கோயில் பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (அ-2-277)

## மன்னார் டிப்போவில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு

### பாரூக் எம்.பி. உறுதியளிப்பு

மன்னார். அரச பேருந்து சாலையில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுத்தருவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக் தொழிற் சங்க பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

மன்னார் அரச பேருந்து சாலையின் தொழிற் சங்க பிரதிநிதிகளுக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக்குக்கும் இடையில் அண்மையில் மன்னார் டிப்போவில்விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது மன்னார் டிப்போவில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து மன்னார் டிப்போவின் தொழிற்சங்க பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.


குறிப்பாக மன்னார் டிப்போவில் நிலவும் நீர் பற்றாக்குறை, மலசலக்கூடம் இன்மை, தங்குமிட வசதிகள் இல்லாமை மற்றும் டிப்போவில்பணியாற்றும்ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

தற்போது இயங்கி வரும் மன்னார் டிப்போவின் தொழிற்சங்க நிர்வாகத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் தெரியப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் நாளை சனிக்கிழமை போக்குவரத்துத்துறை அமைச்சர் மன்னாருக்கு வருகை தரவுள்ள நிலையில் குறித்த பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக் இதன் போது உறுதியளித்தார். குறித்த சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.எஸ்.எம்.பஸ்மி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆட்சி மாற்றத்தின் பின் சீனா எதிர்கொள்ளும் சவால்கள்...!



..கடந்த காலத்தைக் கருத்திற் கொண்டு எல்லா நாடுகளுடனும் நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கான வெளியுறவுக் கோட்பாட்டை வரைவதென நாங்கள் மிகத் தெளிவாகத் தீர்மானித்துள்ளோம்' என இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சுதந்திரநாள் உரையில் தெரிவித்துள்ளமையானது, மறைமுகமாக சீனாவுடனான கடந்த காலத் தொடர்பைச் சுட்டிக்காட்டுகிறது.

இந்தியாவுடன் நட்புறவைப் புதுப்பித்துக் கொள்வதை மைத்திரிபால சிறிசேன தனது முன்னுரிமையாக்கிய போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சீனக் கொள்கை தொடர்பாக சீனா கவலை கொண்டமை ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

மைத்திரிபால சிறிசேன இலங்கையின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் தனது முதலாவது வெளியுறவுப் பயணமாக இந்தியாவுக்குச் சென்ற போது அவரை இந்திய அரசாங்கம் வரவேற்றது. இந்தப் பயணத்தின்போது சிவில் அணுவாயுத ஒத்துழைப்பு உடன்படிக்கை உட்பட நான்கு வெவ்வேறு உடன்படிக்கைகளில் இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திட்டன.

இலங்கையில் சீனாவால் மேற்கொள்ளப்பட்ட பாரிய திட்டங்களில் இடம்பெற்ற மோசடிகளை இலங்கையின் புதிய அரசாங்கம் மீளாய்வு செய்யப் போவதாக அறிவித்ததானது இப்புதிய அரசாங்கம் தொடர்பாக சீனாவின் நிச்சயமற்ற தன்மையை புரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் தரித்து நிற்பதற்கு ராஜபக்ச அரசாங்கம் அனுமதி வழங்கியதை விட இலங்கையின் புதிய அரசாங்கம் சீனாவுடன் 'வித்தியாசமான அணுகுமுறையைக்' கைக்கொள்ளும் என சீனாவுக்குப் பயணம் செய்திருந்தபோது இலங்கையின் வெளியுறவு அமைச்சர் சமரவீர தெரிவித்திருந்தார்.

'யப்பானியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தந்திருந்த வேளையில் கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் எவ்வாறான சந்தர்ப்ப சூழ்நிலையில் தரித்து நிறுத்தப்பட்டன என்பது உண்மையில் எனக்குத் தெரியாது. ஆனால் இவ்வாறான ஒரு சம்பவம் எமது ஆட்சிக்காலத்தில் இடம்பெறாது என்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்' என சமரவீர மேலும் குறிப்பிட்டார்.

ஆனால் இலங்கையின் கருத்தை சீனா ஏற்பதற்கான மனநிலையில் இல்லை என்பதை சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளரின் கருத்துக்கள் வெளிப்படுத்தி நின்றன.

மார்ச் 02, 2015 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பாக வினாவப்பட்ட போது, 'சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் ஏடன் வளைகுடா மற்றும் சோமாலியா போன்றவற்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. அவ்வழியே இலங்கைத் துறைமுகத்தில் மீள்வழங்கலுக்காகத் தரித்து நின்றன. இவை சாதாரணமான, வெளிப்படையான செயற்பாடுகள். அனைத்துலக நடைமுறைகளுக்கு அமைவாகவே இக்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றன' என சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

'இது தொடர்பில் சீனா, இலங்கையின் அனுமதியை பெற்றிருந்தது. உலகளாவிய ரீதியில் இடம்பெறும் கடற்கொள்கைக்கு எதிரான பரப்புரைக்கு இலங்கை தனது ஆதரவை வழங்குவதைக் கோட்பாடாகக் கொண்டுள்ளது. இதனால் நட்பு நாடுகளின் நீர்மூழ்கிக் கப்பல்கள் தனது துறைமுகத்தில் தரித்து நிற்பதையும் இலங்கை வரவேற்கிறது' என சீனப் பேச்சாளர் சுட்டிக் காட்டினார்.

முறிந்துபோயுள்ள இலங்கையுடனான உறவை மீளக் கட்டியெழுப்புவதற்கான முயற்சியை அமெரிக்கா மேற்கொள்வதற்கு இலங்கையின் புதிய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாகவும் சீனா கவலை கொள்கிறது.

அமெரிக்காவுடனான சிறந்த நல்லுறவானது இலங்கையின் வர்த்தக மற்றும் முதலீட்டுத் துறையை ஊக்குவிப்பதோடு மட்டுமல்ல அண்மையில் இந்தியாவுக்கான தனது சுற்றுப் பயணத்தை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மேற்கொண்டதன் பின்னர் நெருக்கமாகியுள்ள இந்திய- அமெரிக்க உறவின் பின்னர் சீனாவுடனான தனது மூலோபாய உறவில் சமநிலையைப் பேணுவதற்கும் மிகவும் முக்கியமானதாகும்.

இலங்கை மீதான போர்க் காலக குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான அனைத்துலக விசாரணைக்காக ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து அமெரிக்காவின் ஆதரவுடன் கடந்த மூன்று ஆண்டுகளாக இலங்கை எதிர்கொண்டு வரும் தீர்மானங்களை முகங்கொடுப்பதற்கும் இலங்கைக்கு அமெரிக்காவின் ஆதரவு அவசியமானதாகும்.

பெப்ரவரியில் அமைச்சர் சமரவீர அமெரிக்காவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டதுடன் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியுடன் பேச்சுக்களை நடாத்தினார். இவரது பயணத்தின் இறுதியில் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஊடக மாநாட்டில், 'அமெரிக்காவுடன் நல்லுறவைப் பேணுவதில் இலங்கை ஆர்வமுடன் இருப்பதாகவும் இரு நாடுகளுக்கும் இடையிலான பங்களிப்பை மேலும் ஆழமாக்கி விரிவாக்குவதாக தீர்மானித்துள்ளதாகவும்' சமரவீர தெரிவித்திருந்தார்.

பெப்ரவரியில் அமெரிக்காவின் பாதுகாப்பை மையப்படுத்தி வெளியிடப்பட்ட இரண்டாவது மற்றும் இறுதி மூலோபாய பாதுகாப்புக் கோட்பாட்டில் ஒபாமா அரசாங்கம் 'கூட்டு நடவடிக்கை' தொடர்பாக அழுத்தமாகத் தெரிவித்ததுடன் இதன் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தியிருந்ததால் சீனா இது தொடர்பாக யோசனை செய்த அதே காலப்பகுதியிலேயே மங்கள சமரவீரவும் அமெரிக்காவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

அமெரிக்கா மற்றும் இந்தியாவுடனான இலங்கையின் நட்புறவானது இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் அமெரிக்காவின் மூலோபாய நலனை மேலும் பலப்படுத்துவதற்கும் குறிப்பாக, அண்மையில் இந்தியாவுக்கான தனது பயணத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி இந்தியாவுடன் மேற்கொண்ட மேலும் ஐந்து ஆண்டுகளுக்கான இந்திய- அமெரிக்க மூலோபாய ஒத்துழைப்பு உடன்படிக்கை விரிவாக்கப்பட்டதன் பின்னர் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் மூலோபாய நலன்கள் பலப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எனினும், மே 2015 இல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்ததன் பின்னர் இந்தியாவுக்கான தனது பயணத்தை சீன ஜனாதிபதி மேற்கொண்ட போது இரு தலைவர்களுக்குமிடையில் எட்டப்பட்ட உடன்பாடுகளின் சாதகமான அம்சங்களை முதன்மைப்படுத்தி அதனைப் பலப்படுத்துவதன் மூலம் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் ஏற்படும் அமெரிக்காவின் இருப்பைப் பலவீனப்படுத்த சீனா முயற்சி செய்துள்ளது.

இந்தியாவுடனான உறவை மீளக்கட்டியெழுப்புவதற்கான இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விருப்பத்தை வாய்ப்பாகக் கொண்டு சீன-இந்திய-இலங்கை முத்தரப்பு உறவைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையில் ஏற்கனவே நிலைத்திருக்கும் தனது உறவை மேலும் சிறப்பாக்குவதில் சீனா ஆர்வங் காண்பிப்பது போல் தெரிகிறது.

'இந்திய-இலங்கை உறவில் நட்பார்ந்த நெருக்கமான முன்னேற்றம் ஏற்படுவதைப் பார்க்கும்போது எமக்கு மகிழ்ச்சியாக உள்ளது. சீனா, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு இந்தியா மற்றும் இலங்கைக்கும் முழுப் பிராந்தியத்திற்கும் பயனளிக்கும் என சீனா நம்புகிறது. ஆகவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவில் முன்னேற்றத்தைக் காண்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்' என சிறிசேன இந்தியாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்த போது சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்த இக்கருத்தானது சீனாவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகின்ற சான்றாகும்.

இவ்வாறான ஒரு உறவுநிலை ஈர்ப்பை ஏற்படுத்துவதாகவும் மூன்று நாடுகளும் தமக்கான சொந்த நலன்களை வென்றெடுப்பதற்கான ஒரு வாய்ப்பையும் வழங்கும். சீனாவைப் பொறுத்தளவில் இந்திய மாக்கடல் பிராந்தியத்திலும் தெற்காசியாவிலும் தனது மூலோபாய நலன்களை அடைந்து கொள்வதற்கும், கரையோர பட்டுப்பாதைத் திட்டத்தை வெற்றிகரமான நிலைக்குக் கொண்டு செல்வதற்கும் உதவும்.

எனினும், இந்த உலகின் உண்மையான அரசியலின் பிரகாரம், தனது மூலோபாய வெளிக்குள் சீனா உள்நுழைவதானது இந்திய மாக்கடல் பிராந்தியத்திலும் சஇலங்கையிலும் இந்தியா தனது மேலாதிக்கத்தை இழப்பதற்கு வழிவகுக்கும் என இந்தியா கருதுகிறது.

இதற்கும் மேலாக, இந்தியப் பிராந்தியத்தை சீனா சட்டத்திற்கு முரணாக அபகரித்துள்ளமை, அருணாச்சலப் பிரதேசம் முழுவதையும் உரிமை கோருதல், தீர்க்கப்பட முடியாத எல்லைப் பிரச்சினைகள் உட்பட இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே ஏற்கனவே உள்ள பல்வேறு சிக்கல்கள் இவ்விரு நாடுகளின் உறவுநிலைக்குத் தடையாகக் காணப்படுகிறது.

எதுஎவ்வாறிருப்பினும், மார்ச் மாதத்தில் சீனாவுக்கான தனது சுற்றுப் பயணத்தை ஜனாதிபதி சிறிசேன மேற்கொண்டதன் பின்னரும், இன்று சிறிலங்காவுக்கான தனது பயணத்தை இந்தியப் பிரதமர் மேற்கொண்டதன் பின்னரும் இதேபோன்று சீனாவுக்கான தனது பயணத்தை மே மாதத்தில் இந்தியப் பிரதமர் மேற்கொண்டதன் பின்னரும் முத்தரப்பு உறவு நிலை எவ்வாறு இருக்கும் என்பது தெளிவாகும்.

ஏப்ரல் 2015 இன் இறுதி வாரத்தில் இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்ததன் பின்னர் இலங்கையின் அரசியற் சூழல் எவ்வாறிருக்கும் என்பது மேலும் தெளிவாகும்.

(முற்றும்)

-நித்யபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதிக்கு சோதிட சேவையை வழங்க மகிந்த ராஜபக்ஷவின் சோதிடர் விருப்பம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட சோதிடரான சுமணதாஸ அபேகுணவர்த்தன. தமது சேவையை ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் தொடர்வதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளார்.

சுமணதாஸவின் சோதிட கணிப்பின்படியே மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

எனினும் தாம் மகிந்த ராஜபக்ஷவுக்கு தோல்வி ஏற்படும் என்று கூறினால் அதனை அவர் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. எனவே தான் தோல்வியடைவார் என்று தெரிந்தும் அவர் வெற்றி பெறுவார் என்று தாம் மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்ததாக சுமணதாஸ தெரிவித்தார்.

இந்தநிலையில் சுமணதாஸ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தனக்கு வாய்ப்பு தருமாறு கோரி கடிதம் எழுதியுள்ளார்.

எனினும் அதற்கு ஜனாதிபதி பதில் அனுப்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சீனாவின் போட்சிட்டி நிர்மாணப்பணி நிறுத்தம் நாளொன்றுக்கு 380,000 டொலர்கள் நட்டம்

கொழும்பு போட்சிட்டி நிர்மாணங்கள் இடைநிறுத்தப்பட்டமை காரணமாக நாளொன்றுக்கு 380, ஆயிரம் அமெரிக்க டொலர்கள் நட்டம் தமக்கு ஏற்படுவதாக நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

சிசிசிசி என்ற சீனாவின் நிர்மாணம் மற்றும் தொலைத்தொடர்புகள் நிறுவனம் இதனை தெரிவித்துள்ளது.

கொழும்பு போட்சிட்டி 100 வீத தனிப்பட்ட நிதியின்கீழ் 1.4 பில்லியன் டொலர் நேரடி நிதியூட்டலில் 2014 இல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தநிலையில் இடைநிறுத்தம் காரணமாக கடலை நிரப்பி மேற்கொள்ளப்படும் 200 மீற்றர் நீர்நிரப்பு நிர்மாணம் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் 4 ஆயிரம் பேர் நேரடியாகவும் ஆயிரம் பேர் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக்களை பெற்றிருந்தனர் என்று சீன நிறுவனம் கூறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஏப்ரல் மாதம் 23ம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்த ஐ.தே.க.தீர்மானம்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதிக்கு பின்னர் பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெளிவுபடுத்தினார்.

ஏப்ரல் மாதம் 23ஆம் திகதிக்கு பின்னர் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும். அதுவே அனைவரது கருத்தாக அமைந்திருந்தது. தேர்தலுக்கு முன்னர் நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். மக்களுக்காக அந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதனால் ஏப்ரல் 23 ஆம் திகதியை இறுதித் திகதியாக கணிப்பிட்டு, ஏப்ரல் 23ஆம் திகதிக்கு பின்னர் பாராளுமன்ற தேர்தலொன்றை நடத்த வேண்டும் என ஐக்கியதேசியக் கட்சி ஏகமனதாக தீர்மானித்துள்ளது. தற்போதுள்ள தேர்தல் முறைக்கு அமைய, ஏப்ரல் மாதம் 23ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்த நாம் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## 74 இந்தியர்கள் நாடு கடத்தல்!

(கொழும்பு)

**சுற்றுலா விசாவில் வந்து சட்டவிசோதமாக தங்கியிருந்து பணியாற்றிக் கொண்டிருந்த 74 இந்தியர்களை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினர் செய்துள்ள அதே வேளை கைது செய்யப்பட்டவர்களை நாடுகடத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிய வருகினறது.**

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மத்துகம பிரதேசத்தில் தங்கி சட்டவிரோதமாக பணியாற்றிக் கொண்டிருந்த 74 இந்தியர்களை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சுற்றுலா விசாவில் வந்தே இவர்கள் தொழில்களில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றிலேயே இவர்கள் பணியாற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த 74 பேரும் நாடு கடத்தப் படவுள்ளனர்.

நிறுவனத்தின் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குடிவரவுத் திணைக்கள தகவலின்படி இது வெளிநாட்டவர்களால் மீறப்பட்ட பாரிய விசா முறை கேடாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கான பயணத்தை ஆரம்பித்துள்ள நிலையில் இந்தியர்கள் 74 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ)

## யோஷிதவின் விமான வழக்கினை திரும்பப்பெற போவதாக அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவுக்கு சொந்தமென கூறப்பட்டு நாரஹேன்பிட்டியில் கண்டு பிடிக்கப்பட்ட சிறிய ரக விமானம் தொடர்பில் எவ்வித குற்றச்சாட்டுக்களையும் சுமத்தப் போவதில்லை என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

பொலிஸார் நேற்று முன்தினம் இது தொடர்பில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர். எனவே அது தொடர்பான வழக்கை திரும்பப்பெற்றுக்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த விமானம் ராய் விஜயவர்த்தன என்பவரால் தயாரிக்கப்பட்டது.

எனினும் அது பறக்கும் தன்மையை கொண்டிருக்கவில்லை. இதனையடுத்து அதனை திரைப்பட தயாரிப்பாளர் சந்திரன் ரட்ணம் யோஷித ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளார்.

இந்தநிலையில் குறித்த விமானத்தை ரோய் விஜயவர்த்தனவின் குடும்பத்துக்கு திருப்பியளித்த பின்னர் வழக்கை திரும்பப்பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த விமானம் வைக்கப்பட்டுள்ள களஞ்சியத்தை திறந்து விமானத்தை அங்கிருந்து அகற்றவேண்டும் என்று நீதிமன்றம் யோஷித ராஜபக்ஷவுக்கு உத்தரவு பிறப்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பொலநறுவையில் நில அதிர்வு

பொலநறுவை மாவட்டத்தின் பல பிரதேசங்களில், நேற்று முன்தினமிரவு 3 விநாடிகளுக்கு சிறியளவிலான நில அதிர்வு ஏற்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கிரிதலே , பகமுன, கதுருவெல மற்றும் தியபெதும ஆகிய பிரதேசங்களிலே இந்த அதிர்வு ஏற்பட்டதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8.30 முதல் 9 மணி வரையான காலப்பகுதியில் இந்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.இது ரிக்டர் மானியில் 2.8 மெக்னிரியூடாக பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வானிலிருந்து அதிக வெளிச்சத்துடன் பூமியை நோக்கி வந்த எரிநட்சத்திரம் ஒன்றினாலேயே இந்த அதிர்வு ஏற்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது பூமிக்கு அருகில் வரும் போது வெடித்துச் சிதறியதாக அவர்கள் கூறியிருந்தனர்.

இது சம்பந்தமாக எமது செய்திப்பிரிவு கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் பேராசிரியர் சந்தன ஜயரத்னவை தொடர்பு கொண்டு கேட்ட போது, கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் படி, பாரிய எரி நட்சத்திரம் ஒன்று பூமியில் வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிப்பதாக தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### பலம் எதிலே

ஒரு ஜப்பான் நாட்டுக்கதை. அதாவது ஒரு பெரிய வீரர் இருந்தார். அவருடைய பெயர் என்னவென்றால், நுபுநாஹா என்பது. அவர் ஒரு சிறந்த படை வைத்திருந்தார். அந்தப் படையை வைத்துக் கொண்டு அதன் துணையோடு போர் செய்து பல வெற்றிகளை அடைந்தார்.

இதில் அவருக்கு நம்பிக்கை வந்துவிட்டது. இன்னும் சில பெரிய பகுதிகளையெல்லாம் நாம் கைப்பற்றிக்கொள்ளலாம். அந்த நம்பிக்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு பெரிய எதிரியை சந்திப்பதற்கு அவர் முயற்சி செய்தார். அந்த எதிரியிடம் நிறைய இடங்கள் இருந்தன. அவருக்கு ஆட்சிப் பொறுப்பு அதிகமாக இருந்தது.

அவர் அந்த போர் செய்ய ஆரம்பித்தவுடனேயே படையில் இருந்தவர்களுக்கும் தளபதிக்கும் கொஞ்சம் சந்தேகம் வந்து விட்டது. இவ்வளவு பெரிய எதிரியை எங்களால் வெல்ல முடியுமா? அவரிடம் அதிகமான படைகள் இருக்கின்றனவே. எப்படி ஜெயிக்கின்றது என்ற தயக்கம் இவர்களுக்கு வந்துவிட்டதாம். அதை எப்படி தலைவரிடம் சொல்கின்றது என்று எல்லோரும் தயங்கிக் கொண்டே இருந்தார்கள். பின்னர் தளபதி மட்டும் கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு தலைவரிடம் போய்ப் பேசினார். இது கொஞ்சம் சிக்கலான விவகாரமாக இருக்கும்போல் தெரிகின்றது. இந்தப் போரில் எங்களுக்கு வெற்றி கிடைக்குமா? இல்லையா? என்று எங்களுக்கு சந்தேகமாக இருக்கின்றது. அதனால் கொஞ்சம் ஆலோசனை செய்துவிட்டு செய்யலாமே என்றாராம் அவர்.

அப்போது அரசர் சொல்கின்றார். ஏதாவது ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் மனதில் ஊசலாட்டம் இருக்கக்கூடாது. சரி உங்களுக்கு இப்பொழுது ஊசலாட்டம் வந்துவிட்டது. இந்தப் பொறுப்பை நாங்களே தீர்மானிக்கிறதை விட இறைவனிடமே விட்டுவிடலாமே. இப்போது எங்களுடைய புத்த விஹாரைக்குப் போவோம். அங்கே போய் ஒரு நாணயத்தை எடுத்து பூவா, தலையா? போட்டுப் பார்ப்போம். தலை விழுந்தால் போராட்டத்தை தொடர்ந்து செய்வோம். ஏனென்றால் அனுமதி கிடைத்துவிட்டது என்று அதற்கு அர்த்தம். பூ விழுந்தால் போராட்டத்தை தவிர்த்து விடுவோம் என்று சொன்னாராம்.

படைவீர்களும் தளபதிகளும் ஏற்றுக்கொண்டனர். அதன் பின்னர் புத்த விஹாரைக்குள் போகின்றார்கள். எல்லோரும் வெளியிலே காத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இந்த தலைவர் மட்டும் உள்ளே போய் விட்டு ஒரு நாணயத்துடன் வெளியே வந்தாராம். இப்போது பாருங்கள் இந்த நாணயத்தை சுண்டிப் போடப் போகின்றேன். இதில் தலை விழுகின்றதா, பூ விழுகின்றதா? என்று பாருங்கள். தலை விழுந்தால் போர். பூ விழுந்தால் போரில்லையென்று நாணயத்தை சுண்டிப் போட்டாராம். எல்லோரும் ஆவலாகப் பார்த்தார்கள். தலைதான் விழுந்திருந்தது. ஆகா எங்களுக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்கும். புத்தர் விஹாரையில் இருந்தே அவர்கள் உத்தரவு கிடைத்துவிட்டதென்ற உற்சாகம் எல்லோருக்கும்.

அதே உற்சாகத்தோடு போர்க்களத்திற்குப் போனார்களாம். நல்லா திறமையாக போர் செய்திருக்கின்றார்கள். அதனோடு ஜெயித்துவிடுவோம் என்ற நம்பிக்கையும் இருந்தது. கடைசியில் பார்த்தால் அவர்களுக்குத்தான் வெற்றியும் கிடைத்ததாம். எல்லோரும் தலைவருக்கு நன்றி சொன்னார்களாம். தளபதியும் ரொம்ப புகழ்ந்து பேசினாராம் தலைவரை. தலைவருடைய விடாமுயற்சியும் வழிகாட்டலும்தான் எங்களுக்கு இந்த வெற்றியை கொடுத்தது என்றாராம். பார்த்தால் அந்த நாணயத்தினுடைய இரண்டு பக்கமும் தலைதான் இருந்ததாம். அந்த மாதிரி நாணயத்தை அமைத்திருக்கின்றார் தலைவர். அப்போதுதான் சொன்னாராம் இந்த நாணயம் வந்து வெற்றியை தீர்மானிக்க்வில்லை, தலைவிதி எங்களுடைய வெற்றியைத் தீர்மானிக்கவில்லை.

நாங்கள் ஜெயித்துவிடுவோம் என்ற மன உறுதிதான் எங்களை ஜெயிக்க வைத்திருக்கின்றது. அந்த மன உறுதியைக் கொடுக்கின்றதற்குத் தான் நான் இந்த நாணயத்தை பயன்படுத்திக் கொண்டேன். ஆக எங்களுக்கு வெற்றியைத் தந்தது தலைவிதியும் நாணயமுமல்ல. எங்களால முடியும் என்ற நம்பிக்கையும் மன உறுதியும் தான் என்று சொன்னாராம். எந்த வெற்றிக்கும் இந்த மனஉறுதி தான் அடிப்படை அல்லவா? எதிலும் ஒரு தெளிவு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி ஆகிவிடும். செல்வந்தர் ஒருத்தர் தன்னுடைய சாரதியை அழைத்து 500 ரூபாவை கொடுத்து பஜாருக்குப் போய் கார் வாங்கிவிட்டு வாருங்கள் என்றாராம். அவர் ஒன்றும் பதில் சொல்லாமல் புறப்பட்டு போய்விட்டார். கூட இருந்த நண்பர்களிடம் அவர் சொல்லியிருக்கின்றார் இவர் பாருங்க 500 ரூபாவிற்கு கார் வாங்கச் சொன்னேன் ஒன்றுமே கேட்காமல் போகி ன்றார் என்று. அந்த நண்பர் சொன்னாராம், உங்கள் சாரதி பரவாயில்லை. இருங்க எங்கள் சாரதியை கூப்பிடுகின்றேன் என்று. கூப்பிட்டு அவரிடம் சொன்னாராம் நான் வீட்டில் இருக்கின்றேனா என்று போய் பார்த்திட்டு வாருங்கள் என்றுவிட்டு. அவரும் பேசாமல் போய்விட்டாராம்.

அதன்பின்னர் கடைத்தெருவிற்கு வந்து அந்த இரண்டு சாரதிகளும் அவர்களுக்குள்ள பேசிக்கொள்கின்றார்களாம். எங்கள் முதலாளிக்கு ஒன்றுமே புரியவில்லை. இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. எந்தக் கடை திறந்திருக்கும்? இன்றைக்குப் போய் கார் வாங்கச் சொல்கின்றார் என்று சொன்னாராம் ஒரு சாரதி. அதற்கு இன்னொரு சாரதி சொல்லியிருக்கின்றார். என்னை போய் வீட்டில் அவர் இருக்கின்றாரா? என்று பார்த்துவிட்டு வரச்சொல்கின்றாரே என்னை ஏன் அலைய விடுகின்றார். அவரே வீட்டிற்கு போன் பண்ணி நான் இருக்கின்றேனா பார் என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது தானே என்றார்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொரீஷியஸுக்கு இந்தியா ரூ.3,100 கோடி கடனுதவி



குறித்த நமது ஒப்பந்தம், நமது அறிவியல் பொருளாதார ஒத்துழைப்பில் முக்கிய படியாக அமையும்.

வரிவிதிப்பு தொடர்பான தகவல் பரிமாற்றத்தில், மொரீஷியஸின் ஆதரவு, ஒத்துழைப்புக்காக பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன் என்று மோடி தெரிவித்தார்.

மொரீஷியஸ் பிரதமர் அனிரூத் ஜகந்நாத் கூறுகையில்,

இந்தியா-மொரீஷியஸ் இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கு முழு ஆதரவு தரும்படி மோடியிடம் கேட்டுக் கொண்டேன் என்றார்.

இந்தியாவுக்கு அதிக அந்நிய நேரடி முதலீட்டை தரும் நாடுகளில்



மொரீஷியஸ் நாட்டின் உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக, இந்தியா 3,100 கோடி ரூபா கடனுதவி வழங்க முன் வந்துள்ளது. இரு நாடுகளுக்கு இடையே 5 ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

பிரதமர் மோடி, சீசெல்ஸ் தீவுகளில் பயணத்தை முடித்துக் கொண்டு மொரீஷியஸ் நாட்டுக்கு நேற்று முன்தினம் சென்றார். அங்கு அவருக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர், அந்நாட்டு பிரதமர் அனிரூத் ஜகந்நாத்தை சந்தித்து பேசினார். அப்போது, இரு நாடுகளுக்கு இடையிலான 5 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. பின்னர், பிரதமர் மோடி கூறியதாவது,

மொரீஷியஸின் உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக, 3100 கோடி ரூபா கடனுதவி வழங்குவதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். மொரீஷியஸில் பெற்றோலியம்சேமிப்பு கிடங்கு வசதிகளை விரைந்து அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

இருதரப்பு நல்லுறவில், நம்முடைய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒரு மைல்கல்லாக இருக்கும் என கருதுகிறேன். கடல்சார் பொருளாதாரம் மொரீஷியஸும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

மொரீஷியஸின் அகலிகா தீவுக்கு கடல் மற்றும் விமானப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், கலாசார ஒத்துழைப்பு, பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஒத்துழைப்பு, இந்தியாவில் இருந்து மாம்பழ இறக்குமதி குறித்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதற்கு முன்னதாக, அந்நாட்டு ஜனாதிபதி ராஜ்கேஸ்வர் பூர்யாகையும் மோடி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சிரியா விடயத்தில் ஐ.நா படுதோல்வி

(டமாஸ்கஸ்)

**சிரியாவின் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வி அடைந்திருப்பதாக 21 தொண்டு அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.**

சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்தது.

இந்த யுத்தத்தை நிறுத்தவோ, பொது மக்களை பாதுகாக்வோ ஐக்கிய நாடுகள் சபை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று அந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அத்துடன் சிரியாவின் பிரச்சினைகளுக்கான நிரந்த தீர்வு ஒன்றை அமுலாக்குவதற்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை தவறி இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கீ மூன், சிரியாவிற்கான அரசியல் தீர்வு நீண்டகால இலக்காக இருப்பதாக கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற இறுதியுத்தத்தின் போதும், ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு தோல்வி அடைந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் இடம் பெற்ற உயிரிழப்புகளை தடுக்கவும், யுத்தத்தை நிறுத்தவும் ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டதாக, ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளரான ஜோன் பெற்றியின் அறிக்கையில்தெரியவந்திருந்தது.

இந்த குற்றச்சாட்டை ஐக்கிய நாடுகளின்பொது செயலாளர்பான்கீமூன்று ஒப்பு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பெண் வேட்பாளர் கடத்திக் கொலை

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோ நாட்டில் உள்ள குயிரேரோ உள்ளிட்ட 6 நகரங்களில் எதிர்வரும் ஜுன் மாதம் முதல்வர் தெரிவுக்கான தேர்தல் நடைபெறுகிறது.

இதில் முன்னாள் முதல்வரின் மனைவி ஏய்டுநவா வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். அவர் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில் 2 நாட்களுக்கு முன்பு திடீரென கடத்தப்பட்டார். அவர் எங்கு இருக்கிறார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்கிடையே பக்கத்து நகரான கில்பான்.சியோவில் உள்ள ஒரு வீதியோரத்தில் ஏய்டுநவா சுட்டுக்கொல்லப்பட்டு சடலமாக கிடந்தார்.

மெக்சிக்கோ நாட்டில் பல்வேறு குற்றச்செயல் கும்பல்கள் செயற்பட்டு வருகின்றன. அவர்கள் இதுபோன்று கடத்தி கொலை செய்வது வாடிக்கையாக உள்ளது. அவர்கள் தான் இவரையும் கொலை செய்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

ஏய்டுநவா சடலம் அருகே ஒரு கடிதம் கிடந்தது. அதில் தேர்தலில் போட்டியிடுவோர்களுக்கு ஏய்டுநவாவின் கதி தான் ஏற்படும் என்று எழுதப்பட்டு இருந்தது.

ஏய்டுநவாவின் கணவர் முன்பு அந்த நகரின் முதல்வராக இருந்தார். அவரையும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட கும்பல் ஒன்று ஏற்கனவே கடத்தி கொலை செய்தது. ஏய்டுநவாவின் மகன் சில மாதங்களுக்கு முன்பு கடத்தப்பட்டார். அவருடைய கதி என்னவென்று இதுவரை தெரியவில்லை.

குயிரேரோ நகரில் சில மாதங்களுக்கு முன்பு 42மாணவர்களை கும்பல் ஒன்று கடத்தி சென்றது. அவர்கள்கதிஎன்ன ஆனது என்றும இதுவரை தெரியவில்லை. (இ)

# கோர விபத்தில் 40பேர் மரணம்



**ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான தன்சானியாவில் நேற்று லொறியுடன் பேருந்து ஒன்று நேருக்கு நேர் மோதிய விபத்தில் 40 பேர் பலியாகியுள்ளனர்.**

தென்மேற்கு தன்சானியாவில் தலைநகர் டாரெஸ்ஸலாமிலிருந்து சுமார் 460 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இரிங்கா நெடுஞ்சாலை வழியாக நேற்று சுமார் 65 பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்தின் மீது எதிர்த்திசையில் இருந்து வந்த சரக்கு லொறி பயங்கரமாக மோதியது.

இதில், லொறியின் மீது வைக்கப்பட்டிருந்த உயரமான கண்டெய்னர் புரண்டு பேருந்து மீது விழுந்தது.

இதனால் ஏற்பட்ட இடிபாட்டுக்குள் சிக்கி 40 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்த 23 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது. (இ)

# விபச்சார வழக்கில் சிக்கி சிறை சென்ற இத்தாலி முன்னாள் பிரதமர் விடுதலை

இத்தாலியில் 1994-95, 2001-06, 2008-11 என மூன்று கால கட்டங்களில் பிரதமர் பதவி வகித்தவர் சில்வியோ பெர்லுஸ்கோனி (வயது78). சர்ச்சைக்குரிய அரசியல்வாதியான இவர், பதவியில் இருந்தபோது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, 17 வயது நடனப் பெண் ஒருவருடன், பணம் கொடுத்து விபச்சாரத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த வழக்கில் 2013ஆம் ஆண்டு, பெர்லுஸ்கோனிக்கு விசாரணை நீதிமன்றம் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

ஆனால் அவர் இந்த தீர்ப்பை எதிர்த்து மிலான் நகரில் உள்ள நீதிமன்றில் மேல்முறையீடு செய்தார். இதில் கடந்த ஆண்டு அவருக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. அவர் விடுதலை செய்யப்பட்டார்.

ஆனால் இந்த விடுதலை தீர்ப்பை எதிர்த்து அரசு தரப்பில் ரோமில் உள்ள நீதிமன்றில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

அந்த வழக்கில், அவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டது செல்லும் என உறுதி செய்து நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த தீர்ப்பு பெர்லுஸ்கோனிக்கு பெருத்த நிம்மதியை அளித்துள்ளது.

அவர் தனது போர்ஜா இத்தாலியா கட்சியை புதிய வலுவுடன் வழிநடத்த இந்த தீர்ப்பு உதவும் என அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (இ)

# 600 மருத்துவர்கள் சிரியாவில் கொலை!

**சிரியாவின் அரசுப் படைகள் நடத்திய தாக்குதலால், 600 வைத்தியர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் இறந்திருக்கலாம் என்று நியூயோர்க்கை சேர்ந்த மனித உரிமைகளுக்கான மருத்துவர்கள் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.**

சிரியாவில் இடம் பெற்று வரும் உள்நாட்டு போரில், அரசு படைகள் வைத்தியசாலைகளைக் கூட விட்டு வைக்காமல் நடத்திய தாக்குதலின் போது, போரினால் மோசமாக காயமடைந்து சிகிச்சை பெற்றவர்களும், அவர்களுக்கு சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த 600 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது பற்றி அந்த அமைப்பின் இயக்குநர் எரின் ஹல்கர் கூறும் போது, போரின் போது வைத்தியசாலைகள் மீது தாக்குதல் நடத்துவது சர்வதேச சட்டங்களின் படி போர்க்குற்றம். ஆனால் சிரியாவின் அரசுப்படைகள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் வைத்தியசாலைகள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

மேலும் காயம்அடைந்தவர்களை காப்பாற்ற முயன்ற செவிலியர்களையும் சித்திரவதை செய்து கொலை செய்துள்ளது என தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு உள்நாட்டு போர் தொடங்கியது முதல் நேற்று வரை சுமார் 15,000 வைத்தியர்களும், பாதிக்கும் மேற்பட்ட மருத்துவ உதவியாளர்களும் சிரியாவை விட்டு வெளியேறி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெயர் குறிப்பிட விரும்பாத சிரிய வைத்தியர் ஒருவர் கூறும் போது, ஒரு உயிரை காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கும்போது கூட நாங்கள் கொல்லப்படலாம்.

எங்கள் உயிருக்கு இந்த நாட்டில் எந்த உத்தரவாதமும் இல்லை என்று தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு என்ன நேரிடுகிறது என்பதல்ல; அதைக்கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதுதான். - ஓர் அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரதமர் மோடியின் வருகை கிருஷ்ண தூதாகுமா?

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார்.

நாளை யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்குமான அவரின் விஜயம் அமைந்திருக்கும். இந்தியப் பிரதமர் மோடி யாழ்ப்பாணத்திற்கு-மன்னாருக்கு வருகை தருகிறார் என்ற செய்தி தமிழ் மக்கள் மத்தியில் இனம்புரியாத ஆர்வத்தை - அங்கலாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் மோடியின் இலங்கைக்கான விஜயத்திற்கு தமிழகத்தில் பலத்த எதிர்ப்பு நிலவுகிறது. தமிழ் மக்களைக் கொன்றொழித்த ஈழதேசத்திற்கு பிரதமர் மோடி போகக் கூடாதென்பதே அந்த எதிர்ப்புக்குக் காரணம்.

கூடவே, இலங்கை அரசின் அழைப்பை பிரதமர் மோடி நிராகரித்திருக்க வேண்டும். போர்க்குற்ற விசாரணை நடைபெறாமல் நான் இலங்கைக்கு வருவது நல்லதல்ல என்று கூறி இலங்கை விஜயத்தை மோடி நிறுத்தியிருக்க வேண்டும் என்பது எதிர்ப்பு தெரிவிப்பவர்களின் ஆதங்கம்.

இந்த ஆதங்கத்தில் நியாயம் இருந்தாலும் வருகின்றவர் பிரதமர் மோடி. இங்கு இருக்கின்றவர் ஜனாதிபதி மைத்திரி என்ற வகையில் ஈழத்தமிழ் மக்கள் மோடியின் வருகையை கிருஷ்ண தூதாகக் கருதுகின்றனர்.

அதாவது பாரதப் போர் தொடங்குவதற்கு முன்னதாக கண்ண பரமாத்மா துரியோதனிடம் தூது செல்கிறார். தூது நோக்கம் சண்டையை நிறுத்துவது. சண்டையை நிறுத்துவது முடியாத காரியம் என்பது கிருஷ்ணனுக்கு அச்சொட்டாகத் தெரியும்.

அப்படியாயின் துரியோதனிடம் கண்ணன் தூது சென்றது எதற்காக? என்ற கேள்வி எழும். பாரதப் போர் தவிர்க்க முடியாததென்பது தெரிந்த விடயமாகினும் போர் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவும் தூது சென்று போரை நிறுத்துவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

இல்லையேல் யுத்தத்தில் உறுதியாகப் போரிட முடியாது போகும். அதேநேரம் போரில் ஏற்படுகின்ற அழிவுகளை ஜீரணிப்பதற்கும் போர் தொடங்குவற்கு முன்னதாக சமாதானத் தூது அவசியம் என்ற வகையிலேயே கிருஷ்ண தூது நடந்தது.

கிருஷ்ணதூது சமாதானத்திற்காயினும் பாரத மக்கள் கிருஷ்ண தூதில் நம்பிக்கை கொண்டிருந்தனர். தர்மம் பாதுகாக்கப்படும் என்பதே அந்த நம்பிக்கை. மக்களின் நம்பிக்கை யுத்தத்தின் ஊடாக நிறைவேற்றப்படுகிறது.

சமாதானம் சாத்தியமாகவில்லை எனும்போது, யுத்தத்தினூடாகவேனும் தர்மம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முடிவு அங்கு எடுக்கப்படுகின்றது.

இது போலத்தான் இந்தியப்பிரதமர் மோடியின் இலங்கை விஜயமும் அமைந்திருக்கின்றது. இலங்கைக்கு வருகை தருகின்ற பிரதமர் மோடி யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்கும் வருகை தருகிறார்.

எனவே, தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுத் தருவதில் மோடியின் இலங்கை விஜயம் பெருந்துணை புரியுமென நம்புகின்றோம். அந்த நம்பிக்கையை நிறைவேற்றுவது மோடியின் தலையாய கடமை.

இந்தியாவின் பிரதமராக மன்மோகன் சிங்கும் இலங்கையில் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷவும் இருந்து, மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்திற்கு வருவதாக இருந்தால் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் தமிழர் தாயகத்தில் நடக்கும்.

ஆனால் யாழ்ப்பாணத்திற்கு வருபவர் பிரதமர் மோடி. பிதமர் மோடி ஏதாவது எங்களுக்கு உதவுவார் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் நிறையவே உண்டு.

**இந்த நம்பிக்கை வீண் போகாமல் இருப்பதை மோடி உறுதி செய்ய வேண்டும்.**

# வாக்குறுதிகள் நிறைவேறும்வரை தேசிய அரசாங்கம் தேவை !

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

நூறு நாட்கள் வேலைத்திட்டம் என்பது தேசிய அரசாங்கத்திற்கான பிரசாரமே தவிர கோட்பாடு அல்ல. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் வரையில் தேசிய அரசாங்கத்தினை கொண்டு செல்ல வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதித் தலைவரும் தூய்மைக்கான நாளை அமைப்பின் தலைவருமான அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்படுவதே தேசிய அரசின் பலம் எனவும் சுட்டிக்காட்டினார்.

சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை நாக விகாரையில் இடம்பெற்றது. இதில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சர்வதிகாரமாக செயற்பட்ட மகிந்த ராஜபக்ஷ ஆட்சியினை வீழ்த்தவும் மக்கள் விரும்பும் வகையில் ஆட்சியினை அமைக்க வேண்டுமென இவ் அரசாங்கத்தினை உருவாக்கவும் நாம் பாரிய கஷ்டங்களை எதிர்கொண்டே மாற்றத்தினை ஏற்படுத்தினோம்.

அதிகாரத்தில் யார் இருக்கின்றனர் என்பதை விடவும் மக்கள் அரசாங்கத்தை விரும்புகின்றனரா என்பதே முக்கியமானது. நாம் இந்த தேசிய அரசுடன் இணைந்திருப்பது யாருடைய தனிப்பட்ட தேவைகளுக்காகவும் அல்ல. மக்களின் நலனை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே.

இன்று தேசிய அரசாங்கத்தின் நூறு நாட்களில் இதை செய்து முடிப்பதற்கான கால அவகாசமே எஞ்சியிருக்கும் நாட் களோ போதாது. இவ்வாறானதொரு நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தலை நடத்தக் கோரி அவசரப் படுத்துகின்றனர்.

அவர்கள் தேர்தலை நடத்த வேண்டுமென்பதாயின் நாம் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆனால் தேர்தல் நடத்த முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை முழுமையாக மாற்றியும் 17 ஆவது திருத்தச் சட்டத்தினை செயற்படுத்தியும் அதே போல் தேர்தல் முறைமையில் மாற்றத்தினை ஏற்படுத்தியும் விட்டு பின்னர் தேர்தலை நடத்த வேண்டும்.

எனவே அனைவரும் ஒன்றை தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். இப்போது அமையப்பெற்றுள்ள தேசிய அரசு இன்னும் ஒரு வருடம் நீடிக்கப்படுமாயின் நாட்டில் பல திருத்தங்களை கொண்டுவர முடியும். அதற்காக தொடர்ந்து தேசிய அரசாங்கம் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதல்ல.

நூறு நாட்களுக்குள் அனைத்தையும் செய்து முடிக்க முடியுமாயின் நல்லது. அவ்வாறு அல்லாது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை இடையில் நிறுத்தி விட்டு தனிக் கட்சி அரசியலை செய்ய நினைப்பதே தவறானது. எனவே இன்னும் சிறிது காலம் தேசிய அரசினூடாக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றார். (எ-11)

# ரணில் தலைமையிலான தேசிய அரசில் இணையோம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியிலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் நிபந்தனைகளின அடிப்படையிலோ தேசிய அரசில் அங்கம் வகிக்கமுடியாது. ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விதிக்கும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே தேசிய அரசில் அங்கம் வகிக்க முடியும் என இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தாமல், நிறைவேற்று அதிகாரத்தை மட்டும் இல்லாதொழிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கையைத் தாம் எதிர்ப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு,

நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதும், தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதும் ஒன்றாக இடம்பெறவேண்டும். அதைவிடுத்து, நிறைவேற்று அதிகாரத்தை மட்டும் இல்லாதொழித்துவிட்டு, தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தாமல் விட்டுவிட முடியாது. நிறைவேற்று அதிகாரத்தை மட்டும் இல்லாதொழிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியால் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள சட்டமூலத்தை நாம் எதிர்ப்போம்.

தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தவேண்டுமாயின், 3 மாதகால அவகாசம் தேவை எனத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். அதுவரை நாம் காத்திருக்கத் தயாராக இருக்கின்றோம். தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்திய அடுத்த நாளே தேர்தலை நடத்தலாம்.

மேலும், ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரத்தில் அனைத்து அதிகாரங்களையும் நீக்கத் தேவையில்லை. மாகாண சபைகளுடன் தொடர்புடைய ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் அப்படியே இருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தைக் கலைத்தல் மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாது உள்ளிட்ட அதிகாரங்களை நீக்கவேண்டும். நிறைவேற்று அதிகாரத்தையும், தேர்தல் முறைமையில் மாற்றத்தையும ஒரேயடியாகக் கொண்டுவந்தால் தான் மக்களுக்குப் பயனாக இருக்கும் என்றார். (எ-11)

# தீவக கல்விவலய ஆங்கில தினம்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்விவலய ஆங்கில தின நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.கதிரேசபிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரன்ஸ் பிரதம விருந்தினராகவும், முன்னாள் தீவக கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (எ)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் சைவசமய பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய திருமண மண்டபத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஓய்வுநிலை ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் ஆசியுரையைமூத்த நயினார் தேவஸ்தானம் சிவஸ்ரீ .க. கிருஸ்ணேஸ்வரக் குருக்கள் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# மஹோற்சவ விஞ்ஞாபனம் 16 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான ஜயவருஷ திவ்விய மஹோற்சவ விஞ் ஞாபனம் எதிர்வ ரும் 16 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பூசையுடன் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றமும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி தேர்த்திருவிழா வும் மறு நாள் 3 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா வும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

# குச்சம் ஞானவைரவர் மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வட-அல்வை அருள்மிகு குச்சம் ஞானவைரவர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஏப் ரல் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூர்வ சதுர்த்தசித் திதியும் உத்தர நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 8.50 மணிமுதல் முற்பகல் 10.10 மணிவரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (இ)

### அமைதியின் சொற்கள்

உணவு, தண்ணீர், சுத்தமான காற்று முக்கியம். நிம்மதியும் முக்கியம் தான்.

*(பிரேம் ராவத்)*

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### அன்புடன் வாழ்வோம்

★ மனிதர்கள் செய்த உதவியை சிந்திப்பதை விட இறைவன் செய்த உதவியை சிந்தனை செய்வீர்!

★ நீங்கள் செய்த நன்மைகளை சிந்திப்பதை விட உங்களில் நிகழ்ந்த பாவங்களைச் சிந்தியுங்கள்.

★ மற்றவர்களின் குற்றங்களை நோட்டமிடுவதை விட உங்களின் குற்றங்களை நோட்டமிடுங்கள்.

★ உன் வாயிலாக இறைவன் ஒரு மனிதனுக்கு நேர்வழி காட்டுவது, இவ்வுலகத்தையும் இதிலுள்ள யாவற்றையும் விட உனக்கு நன்மை பயப்பதாகும்.

★ எவர் அண்டை வீட்டாரை துன்புறுத்துகிறாரோ, அவர் என்னைத் துன்புறுத்தியவராவார்.

★ அன்பு செலுத்தாதவன் அன்பு செலுத்தப்படுவதற்கு அருகதை அற்றவன்.

★ தருமம் செய்ய இயலாதவன் ஒரு நற்செயல் செய்வானாக அல்லது ஒரு கெட்ட செயலிலிருந்து விலகிக் கொள்வானாக. அதுவே அவனது ஈகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய அரபை வீழ்த்தி தென்னாபிரிக்கா அபார வெற்றி

## டிவில்லியர்ஸ் அசத்தல்



ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில் தென்னாபிரிக்கா 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நியூசிலாந்தின் வெலிங்டன் நகரில் நேற்று நடந்த உலகக் கிண்ண "பி" பிரிவு லீக் போட்டியில், தென்னாபிரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ.,) அணிகள் விளையாடின.

இதில் நாணய சுழற்சியில் வென்ற யு.ஏ.இ. அணித் தலை வர் முகமது தாகிர், முத லில் களத் தடுப்பை தெரிவு செய்தார்.

இதைத் தொடர்ந்து முத லில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணிக்கு ஹஸிம் ஆம்லா (12) ஏமாற்றி னார். பின் இணைந்த குயின்டன் டி காக்ரோ சோவ் ஜோடி நிதானமாக ஆடியது.

இரண்டாவது விக் கெட்டுக்கு 68 ஓட்டங்கள சேர்த்த போது குயின்டன் (26) ஆட்ட மிழந்தார். இதனையடுத்து கள மிறங்கிய ரோ சோவ் (43)ஓரளவு சிறப்பான ஓட்டங் கள் குவித் தார்.

அடுத் து பொறுப்பாக ஆடிய டேவிட மில்லர் (49) அரைச்சத வாய்ப்பை இழந் தர். அபார மாக ஆடிய அணித் தல்லவர் டிவி ல்லி யர்ஸ் (99) சதமடிக் கும் வாய்ப்பை கோட்டை விட்டார். டுமினி (23) சோபிக்கவில்லை. கடைசி நேரத்தில் அசத் திய பெகார்டியன் அதிரடியாக விளை யாடி அரைச் சதமடித்து அணிக்கு கைகொடுத்தார். இத னால் தென்னாபிரிக்க அணி 50 ஓவரில் 6 விக்கெட் டுக்கு 341 ஓட் டங்கள் எடுத்தது. பெகார் டியன்(64), பிலாண்டர் (10) ஆட் டமி ழக்காமல் இருந்த னர்.

ஐக்கிய அரபு எமிரே ட்ஸ் சார் பில் முகமது நவீது 3, முகமது தாகிர், அம்ஜத் ஜாவேத், கம் ரான் ஷாஜத் தலா ஒரு விக் கெட் வீழ்த் தினர்.

342 ஓட்டங்கள் எடுத் தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி கள மிறங்கிய ஐக்கிய எமிரேட்ஸ் அணிக்கு தொடக்க ஆட்டக்காரர் அம்ஜத் அலி (21) நல்ல தொடக்கம் கொடுத்தார். பெர்ளங்கர் (5) ஏமாற் றினார். குராம் கான் (12) நிலைக் கவில்லை. ஷய்மன் அன்வா (39) சிறப்பாக விளையாடி வந்த நிலை யில் ஆட்ட மிழந்தார்.

அடுத்து வந்த ஷக்கு லன் ஹய்டர் (7), அம்ஜத் ஜவிட் (5), முகமது நவீட் (17), முகமது தாகிர் (3) வரிசையாக வெளியேறினார். கம் ரான் ஷாஜத் (0) டக் அவுட் ஆக பொறுமையாக ஆடி வந்த ஸ்வாப் னில் பட்டில் (57) அரைசதம் அடித்து கடைசி வரை ஆட்டமிழக் காமல் இருந்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 47.3 ஓவர்களிலே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 195 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனால் தென்னாபிரிக்கா 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

• தென்னாபிரிக்கா சார்பில், மொர் கல், பிலாண்டர், டிவில்லியர்ஸ் தலா 2 விக்கெட்டுகளையும், ஸ்டெ ய்ன், டுமினி, இம்ரான் தாகிர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றி னர். ஆட்டநாயகனாக தென்னாபிரி க்க அணித்தலைவர் டிவில்லிய ர்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (க)



# சங்காவிடம் மண்டியிட்ட மத்யூஸ்




இலங்கை கிரிக்கெட் வீரர் சங்கக்கார ஓய்வு பெறக்கூடாது என்று இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்யூஸ் மண்டியிட்டு கேட்டுக்கொண்டுள்ளார்.

2015 உலகக்கிண்ண போட்டி முடிந்த பிறகு சங்கக்கார ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறு கிறார்.

இலங்கையின் சிறந்த துடுப் பாட்ட வீரர், விக்கெட் கீப்பர் என்ற பெயர்களுக்கு சொந்தக்காரர் சங்கக் கார.

மேலும், கிரிக்கெட் ஆட்டத்தின் சிறந்த தூதர் சங்கக்கார என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவரது ஓய்வு குறித்து இலங்கை அணித்தலை வர் மத்யூஸ் கூறியதாவது, நான் அவரிடம் மண்டியிட்டு கேட்டுக் கொள்கிறேன் ஓய்வு பெற வேண் டாம் என்று, ஆனாலும் அவரது ஆசையையும், முடிவையும் பெரி தும் மதிக்கிறேன். நாட்டுக்காக அவர் ஒவ்வொரு முறை சிறப்பாக ஆடியதற்கு அவருக்கு நன்றிக் கடன பட்டுள்ளோம் என்று கூறி யுள்ளார்.

இந்நிலையில் தனது முடிவில் மாற்றமில்லை என்று கூறிய சங்கக் கார, ஓய்வு பெறுவது என்பது ஒரு வரது ஃபார்ம் தொடர்பான விடய மல்ல. சரியான உணர்வு மற்றும் கால நேரமே ஓய்வை தீர்மானிக் கும் என்று கூறியுள்ளார். (க)

ஐ.சி.சி
உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

**நாளைய போட்டிகள்**

சிம்பாப்வே — காலை 6.30 — இந்தியா

அவுஸ்திரேலியா — காலை 9.00 — ஸ்கொட்லாந்து

**இன்றைய போட்டி**

பங்களாதேஷ் — காலை 9.00 — நியூசிலாந்து

இங்கிலாந்து — காலை 9.00 — ஆப்கானிஸ்தான்

# வித்தியாசமாக மைதானத்தினுள் உள்நுழைந்த டேவிட் மில்லர்

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாபிரிக்காவின் அதிரடி ஆட்டக் காரரான டேவிட் மில்லர் வித்தியா சமாக மைதானத்தில் நுழைந்தார்.

வெலிங்டனில் நேற்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் தென் னாபிரிக்க அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 341 ஓட்டங்கள் குவித்தது.

இதில் ரில்லே ரோச்சவ் அவுட் ஆனதும், 4 ஆவது விக்கெட்டாக களமிறங்கினார் டேவிட் மில்லர். ஆனால், வீரர்கள் வரும் வரிசை யில் பாதிவரை நடந்து வந்த மில் லர், திடீரென என்ன நினைத் தாரோ தெரியவில்லை, பவுண்டரி



எல்லையை அடுத்த தடுப்பு சுவரை தாண்டி குதித்தார்.

மில்லரின் இந்த திடீர் நடவ டிக்கையை பார்த்த ரசிகர்கள் கர கோஷம் எழுப்பினர். அவர் 48 பந்துகளில் 49 ஓட்டங்கள் எடுத்து, அவுட் ஆனார். ஒரு ஓட்டங்களில் அரைசதம் அடிக்கும் வாய்ப்பை தவறவிட்டார்.

ஆனால், டேவிட் மில்லரின் ஆட்டம் பற்றி பேசுவதைவிட, அவரின் ஜம்பிங் பற்றிதான் சமூக வலைத்தளங்கள் அதிகமாக கருத் துகளை பகிர்ந்து வருகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மாத கால...

லண்டனுக்கு சென்றிருந்து ஜனாதிபதி சிறிசேன, பி.பி.சிக்கு பேட்டியளித்தபோது, இந்த விசாரணை என்பது இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைய செயல படும் ஒன்றாக இருக்கும் என்றும், இலங்கையின் அரசியல் சட்ட வரையறைக்குள் இயங்கும் என்றும் கூறியுள்ளார்.

அந்த விசாரணையில் பணியாற்றும் அதிகாரிகள் சுயேச்சையாகவும், பக்கசார்பற்ற முறையிலும் செயல்படுமாறு கோரப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

விசாரணையின் முடிவில் தவறிழைத்ததாகக் கண்டறியப்படும் எவர்மீதும் நடவடிக்கை எடுக்கப்படும.

ஆனால், இந்த விசாரணையில் வெளியார் எவரும் தலையிட அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐ.நா மன்ற வல்லுநர்கள் தெரிவித்த கருத்துக்கள் கணக்கிலெடுத்துக்கொள்ளப்படும்.

விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் குறித்து பதிலளித்த சிறிசேன, இவர்கள் பிரச்சினை குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க ஒரு உயர்மட்டக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அது பரிசீலித்து இவர்கள் விடுதலை செய்யப்படவேண்டுமா அல்லது அவர்கள மீது குற்றச்சாட்டுகள் பதியப்பட வேண்டுமா என்பது குறித்து முடிவு செய்யப்படும் என்று கூறினார்.

நல்லிணக்கத்தை எட்டும் நோக்கிலான புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கலாம் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக அவர் கூறினார்.

**கூட்டமைப்பு நிராகரிப்பு**

இலங்கையின் இறுதிகட்ட போர் தொடர்பிலான எந்த உள்நாட்டு விசாரணையும் ஏற்புடையதல்ல என்று தமழ்த்தேசியக்கூட்டமைப்பு கூறுகிறது.

இறுதிகட்டப் போரின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து உள்நாட்டிலேயே காத்திரமான விசாரணை முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா பிபிசியிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதியின் இந்தக் கருத்தை தாமும், தமிழ் மக்களும ஏற்கவில்லை என்றும், உள்ளக விசாரணையின் மூலம் தமிழருக்கு நியாயம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை இல்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமானசுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

சகல சிங்கள அரசாங்கமும் தலைவர்களும் வெளிநாட்டு விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெளிவாகக் கூறியுள்ளது, மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டிலிருந்து நழுவப் பார்க்கிறார்கள் என்பதே உண்மை எனவும் அவர் கூறினார்.

ஐ.நா. மட்டுமல்ல எந்தவொரு நாடு அல்லது அமைப்பின் ஒத்துழைப்புடனான உள்ளக விசாரணை என்பது தமிழ் மக்களை ஏளனப்படுத்தும் ஒரு செயலாகவே பார்க்கப்படும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். அப்படியான விசாரணைகள் மூலம் ஒருபோதும் உண்மை வெளிவராது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்காது என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

## காரணமின்றி...

கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட ஜெயக்குமாரியை மைத்திரி அரசு பூரணமாக விடுதலைசெய்ய வேணடும். அதேவேளை, மகிந்த ஆட்சியின்போது காரணம் எதுவுமின்றி கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைகளில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் மைத்திரி அரசு உடன் விடுதலைசெய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மகிந்த ஆட்சியில் தமிழருக்கு எதிராக இடம்பெற்ற கெடுபிடிகளால் பலர் கைதுசெய்யப்பட்டனர். அதில் முக்கியமானவர்தான் ஜெயக்குமாரி. காரணம் எதுவுமின்றி பிடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைத் துவைக்கப்பட்டிருந்த இவரை மைத திரி அரசு பிணையில் விடுவித்துள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம்.

இவர் பூரணமாக விடுதலை செய்யப்படவேண்டும். அதுமட்டுமின்றி, சிறைச்சாலைகளில் காரணம் எதுவுமின்றி அடைத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை மைத்திரி அரசு உடன் விடுவிக்கவேண்டும் என்றார். (எ-11)

## ஐ.ம.சு முன்...

ர்பிலும் இதன்போது பேச்சு நடத்தப்படவுள்ளது.

எனினும், முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, தினேஷ குணவர்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்பார்களா அல்லது புறக்கணிப்பார்களா என்பது பற்றி இன்னும் உத்தியோகப்பூர்வமான தகவல்கள் வெளியாகவில்லை. (எ-11)

## இன்று இலங்கை வரும்...

நரேந்திர மோடி சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மோடிக்கு இடையிலான சந்திப்பும் இடம்பெறவுள்ளது.

அதன் பின்னர் இலங்கை மகா போதி சங்கத்திற்கு பிரதமர் மோடி விஜயம் செய்யவுள்ளதுடன், பாராளுமன்றத்திலும் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

நாளை அனுராதபுரம் ஸ்ரீமகா போதிக்கு செல்லவுள்ள இந்தியப் பிரதமர், அதன் பின்னர் மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரையிலான ரயில் போக்குவரத்தையும் ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லவுள்ள பிரதமர் மோடி இந்திய நிதியுதவியில் நிர்மாணிக்கப்படவுள்ள கலாசார மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டவுள்ளதுடன், இந்திய நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளையும் மக்களுக்கு கையளிக்கவுள்ளார்.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு இன்று வரவுள்ள இந்திய பிரதமர் மோடி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

நாளை வட பகுதிக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதுடன் மன்னாரில் இந்திய அரசினால் புனரமைக்கப்பட்ட தலைமன்னார் ரயில் நிலையத்தை திறந்து வைப்பதுடன் தலைமன்னாரில் இருந்து மடுவுக்கான ரயில் சேவையினையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து பிற்பகல் 1.30 யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் பிரதமர் மோடி யாழ்.நூலகத்துக்குச் சென்று பார்வையிடுவார்.

பின்னர் இந்திய அரசினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள கலாசார மையத்திற்கான அடிக்கல்லினையும் நாட்டிவைக்கவுள்ளார்.

பின்னர் இளவாலைக்குச் செல்லும் மோடி இளவாலை வட மேற்கில் அமைக்கப்பட்ட வீடுகளை பொது மக்களிடம் கையளிப்பார். பின்னர் 3.30 மணிக்கு பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு பயணமாவார்.

இதேவேளை இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கைக்கு விஜயம் செய்தமைக்குப் பின்னர் இந்தியாவில் இருந்து 25 வருடங்களுக்குப் பின்னர் முதலில் வரும் பிரதமர் என்ற பெருமையினையும் நரேந்திர மோடி பெற்றுள்ளார். (எ-11)

## தமிழ் அரசியல் தலைவர்...

இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது.

இந்த யதார்த்தங்களின் அடிப்படையில் நமது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பலப்படும் சாத்தியம் தோன்றியுள்ளது. அதேபோல் இங்கே தமிழர்கள் மத்தியிலும் புதிய அரசியல் தலைமைத்துவ அறிகுறிகள் தோன்றியுள்ளன.

எனவே அரசுகள் மத்தியிலான உறவுக்குள் உள்ளடங்கலாக, இங்கே வாழும் இந்தியாவுடன் தொப்புள் கொடி உறவு கொண்ட நமது மக்களுடனும் புதிய போக்கில் இந்திய அரசு உறவுகளை பலப்படுத்த வேண்டும். இந்த பின்னணியில் இலங்கையில் உருவாகிவரும் நல்லாட்சி சூழல் நாடுமுழுக்க வாழும தமிழ் மக்களை அரவணைத்திட, இந்திய அரசு துணை செய்திட வேண்டும்.

குறிப்பாக இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய சமூக நிலைமைகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மலையக இந்திய வம்சாவளி தோட்ட தொழிலாளர்கள் தொடர்பாக பாரத நாட்டுக்கு வரலாற்றுரீதியான தார்மீக கடப்பாடு இருக்கின்றது.

இந்த விடயங்களை நாம் பிரதமர் நரேந் திர மோடியின் நேரடி கவனத்துக்கு கொண்டு வருவோம் என்றார். (எ-11)


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நடாத்தும்
FIRST
Jaffna Marathon 2015
15 Mar 2015
Lycamobile
Call the world for less
Sponsored by UR Friend Foundation

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின்
125வது ஆண்டுவிழாவை முன்னிட்டு
Lycamobile மற்றும் UR Friend Foundation
ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
நடாத்தும் மாபெரும்
Jaffna Marathon
எதிர்வரும்
மார்ச் 15ம் திகதி சனிக்கிழமை
Free
மேலதிக விபரங்களுக்கு: 021 320 2500

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நடாத்தும்
FIRST
Jaffna Marathon
15 Mar 2015
URFF
Sponsored by UR Friend Foundation

Lycamobile
JAFFNA MARATHON MAP






Juniors - 7 Km
Seniors - 21 Km
(9768)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னை...

நடவடிக்கையாக கருதவேண்டாம் என நான் கேட்டுக்கொள்கிறேன், அவர்கள் என்னை தாக்குவதற்கு சீனாவை தாக்குகின்றனர்.

**நான் இலங்கையன்**

சீனா இதன் காரணமாக இலங்கைக்கு உதவுவதை நிறுத்த கூடாது. நான் சீனா சார்பான நபர் என்கின்றனர் அவர்கள். நான் சீனா சார்பான நபரோ அல்லது இந்தியா, அமெரிக்கா சார்பான நபரோ அல்லர். நான் இலங்கை சார்பானவன். நான் இலங்கையை அபிவிருத்தி செய்ய விரும்பினேன். அந்த விடயத்தில் எனக்கு உதவுவதற்கான வளங்களையும், விருப்பத்தையும் அவ்வேளை சீனா மாத்திரமே கொண்டிருந்தது.

உதாரணத்திற்கு. அம்பாந்தோட்டை துறைமுகத்தையும், விமான நிலையத்தையும் நான் இந்தியாவுக்கு வழங்க முன்வந்தேன், ஆனால் அவர்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. ஆகவே நான் யாரிடம் செல்வது, எனக்குத் தேவையான நிதியை அவ்வேளை தரக்கூடியதாகயிருந்தது சீனா மாத்திரமே. கொழும்பு போர்ட் சிற்றி திட்டத்துக்கு உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் அனுமதி வழங்கப்பட்டது என தெரிவிக்கப்படுவதில் உண்மையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

**புதுவாழ்க்கை**

அதிகாலையிலிருந்து இரவு வரை மக்கள் என்னை பார்ப்பதற்காக வந்துகொண்டிருக்கின்றனர். இதுவே எனது புதுவாழ்க்கை. அவர்கள் என்னை அரசியலுக்கு மீண்டும் வருமாறு கோருகின்றனர். எனக்கு எதிராக வாக்களித்ததற்காக தாங்கள் மன்னிப்பு கேட்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். நான் அவர்களிடம் என்னை ஓய்வெடுக்க விடுமாறு கேட்டுக்கொண்டுள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் தற்போதைய அரசியல் நிலையை சுட்டிக்காட்டி கருத்து தெரிவித்துள்ள அவர் நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியேயும் எதிர்க்கட்சி என்ற ஒன்று இல்லாத நிலையை உலகில் வேறு எங்கும் நான் கண்டதில்லை. மக்கள் தங்கள் துயரங்களை தெரிவிப்பதற்கு எங்கு செல்வார்கள் என கேள்வி எழுப்பியுள்ளார்.

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

அனுபவம் உள்ளவர்கள் / அற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

20-30 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். யாழ்.மாவட்டத்தில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

**தொடர் கொள்ளவும்:-**
**0750436062**

(9766)

**மக்களின் முடிவு**

பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவீர்களா என்ற கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காத அவர், மக்கள் என்ன சொல்கிறார்கள் என பார்ப்போம். நான் மீண்டும் அதிகாரத்திற்கு வருவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் பதில்ளித்துள்ளார். ஜனவரியில் நடைபெற்ற தேர்தலில் தான் தோல்வியடைந்தமைக்கு அமெரிக்காவையும், மேற்குலகையும், இந்திய புலனாய்வு பிரிவினரையும் ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார். இது மிகவும் வெளிப்படையான விடயம், அமெரிக்கா மற்றும் நோர்வே எனக்கு எதிராக செயறபட்டது பகிரங்கமான விடயம். றோவும் எனக்கு எதிராக செயற்பட்டது என அவர் குறிப்பிட்டார். நான் இந்தியாவிடம் ஏன் இப்படி செய்கிறீர்கள் என கேட்டேன். நீங்கள் இவ்வாறு செயற்படுவது வெளிப்படையான விடயம் என அவர்களிடம் சுட்டிக்காட்டினேன். இலங்கை மண்ணை நட்பு நாடொன்றிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் என நான் அவர்களுக்கு உறுதியளித்தேன். ஆனால் அவர்களிடம் வேறு திட்டங்கள் இருந்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**தூதரகங்கள் செயற்பட்டன**

என்னை வீழ்த்துவதற்கு அமெரிக்காவும், இந்தியாவும் தங்களது தூதரகங்களை வெளிப்படையாகவே பயன்படுத்தின என்றும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். சீனாவின் நீர்மூழ்கிகள் இலங்கைக்கு வந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், சீன நீர்மூழ்கிகள் இலங்கைக்கு வரும் போதெல்லாம் நாங்கள் இந்தியாவுக்கு அது குறித்து அறிவிப்போம். சீனா ஜனாதிபதி இங்கு வந்ததால் நீர்மூழ்கிகள் வந்தன. சார்க் மாநாட்டுக்காக 2008 இல் இந்திய பிரதமர் இங்கு வந்த போது எத்தனை கப்பல்களும், நீர்மூழ்கிகளும் இங்கு வந்தன என பாருங்கள் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (எ-11)

## பிரச்சினைகளை...

ளவில் யாழ்.மத்திய பஸ் நிலையம் முன்பாக மேற்கொள்ளப்படவுள்ளது பின்னர் ஊர்வலமாக சென்று இந்திய தூதுவராலயத்தில் பாரதப் பிரதமருக்கான மகஜர் கையளிக்கப்படும்

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த நிலத்திலும் பூர்வீகமாக குடியமர்ந்த பிரதேசத்திலும் குடியமர்த்தல். மீள்குடியேற்றம் செய்யும் மக்களுக்கு பூரணமான அடிப்படைத்தேவையை நிறைவேற்றி கொடுக்கவேண்டும்.

மீள்குடியேற்றப்படும் மக்களுக்கான இந்திய வீட்டுத்திட்ட நிதி ஒதுக்கீடு பயனாளிகளுக்கு போதுமானதாக இல்லை. எனவே எட்டரை இலட்சமாக அதிகரிக்க வேண்டும். முன்பு ஐந்தரை இலட்சம் வழங்கியவர்களிற்கு மானியமாக மூன்றரை இலட்சம் வழங்க வேண்டும்.

இந்திய-இலங்கை மீனவர்கள் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுக்கான விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். வளங்களை அழிக்கும் தொழில் முறையை முற்றாக தடை செய்ய வேண்டும். இழுவை படகினால் பாதிக்கப்பட்ட மீனவர்களிற்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

சரணடைந்தவர்களை மீள ஒப்படைக்க வேண்டும். காணாமல் போனவர்கள் தொடரபாக தகுந்த பதில் எமக்கு வேண்டும் போன்ற கோரிக்கைகளினை முன்வைத்தே போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இப்போராட்டத்திற்கு மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், மாவட்ட பூந்தளிர் பெண்கள் அமைப்பு. மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம். தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம். வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றம மற்றும் புனர்வாழ்வுக்குழு. வலி வடக்கு பிரஜைகள் குழு ஆகிய அமைப்புக்கள் ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளன. மேலும இக் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுநலன் விரும்பிகள் பொது அமைப்புக்கள் இப்போராடத்திற்கு ஆதரவு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர் (எ-4)

## மோடியைச் சந்திப்பார்...

படுகிறது. இந்திய ஊடகமான "த ஹிந்து" இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. கொழும்பில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக தனது சொந்த ஊரான தங்காலையில் இருந்து இன்று கொழும்புக்கு மகிந்த ராஜபக்ஷ வரவுள்ளார்.

இதேவேளை, மோடியை ராஜபக்ஷ சந்திப்பாரா? என்று புதுடில்லியில் வைத்து இந்திய வெளியுறவுச் செயலர் ஜெய்சங்கரை செய்தியாளர்கள் கேட்டபோது இது குறித்த தகவல்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். இந்தியப் பிரதமர் மோடி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார். (எ-11)

### மரண அறிவித்தல்

### திருமதி கதிரவேலு அன்னலட்சுமி



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு அன்னலட்சுமி நேற்று (12.03.2015) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும், இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி), காயத்திரிதேவி, சாவித்திரிதேவி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான மீனாம்பாள், சண்முகராசா மற்றும் மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மீரா, இரமணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.03.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காட்டுவளவுக் கந்தசாமி கோவிலடி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

தகவல்:- குடும்பத்தினர்
0779905416

(9771)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்காகவும் நடைபெறுகிறது.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்

★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது

★ Excellent Teacher's Panel & Individual Attention

★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

(ஜ-345)

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
14.03.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

**Batches Starts On**

14.03.2015@10.00am
16.03.2015@ 9.00am
21.03.2015@ 9.00am
23.03.2015@ 9.00am
25.03.2015@ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550

HotLine(S)
0777585913, 0777222422
0714299935

**SIKARAM**
வெளிநாட்டு கல்வி
தொழில், குடியேற்றம் & விசா சேவைகள்

**கனடா EXPRESS ENTRY**
3 இலட்சம்* பேருக்கு நிரந்தர குடியுரிமை
மேலதிக விபரங்களுக்கு
www.sikaram.lk/canada-worker
www.sikaram.lk/canada-trades

Email: info@sikaram.lk Web: www.sikaram.lk f: Edu Sikaram

6வது ஆண்டில் உங்கள் சிகரம் நிறுவனம் மூலம்
O/L* உடன் எந்த நாட்டுக்கும் செல்வதற்கான எந்த வகை விசாவையும் பெற!

**Student Visa - Work Visa - Migration - Visit Visa & Visa Rejection Appeal**

| | |
|---|---|
| UK & Australia | பகுதி நேர வேலைவாய்ப்புடன் Hertfordshire, Greenwhich & Queensland பல்கலை அனுமதி<br>மேலதிக விபரங்களுக்கு : www.sikaram.lk/uk-studentvisa<br>www.sikaram.lk/aus-studentvisa |
| New Zealand | பகுதி நேர வேலைவாய்ப்புடன் NMIT, Quantum & Auckland University பல்கலை அனுமதி & PR<br>மேலதிக விபரங்களுக்கு : www.sikaram.lk/nz-studentvisa |
| Canada | George Brown, Niagara & JRS Colleges இல் ஒரு வருட டிப்ளோமாவுடன் வேலைவாய்ப்பு & PR<br>மேலதிக விபரங்களுக்கு : www.sikaram.lk/canada-diploma |
| Switzerland (26 நாடுகளுக்குச் செல்லக்கூடிய செங்கன் விசா) | 3 இலட்சம் வருமானத்துடனான BHMS College ஹொட்டேல் பயிற்சி & வேலைவாய்ப்பு<br>மேலதிக விபரங்களுக்கு : www.sikaram.lk/swiz-hotelvisa |
| Singapore & Malaysia | SEGi, INTI, SUNWAY, Nottingham, Monash & Nan Yang Universities இல் மிகக் குறைந்த கட்டணத்துடன் ஒரு வருடப் பட்டக்கல்வியை முடித்து விரும்பிய நாட்டுக்குச் செல்லும் ஏற்பாடு<br>மேலதிக விபரங்களுக்கு : www.sikaram.lk/malay-studentvisa |
| Work Visa To Any Country | அவரவர் கல்வித் தகைமை, தொழில் அனுபவத்துக் கேற்ப விரும்பிய நாட்டு தொழில் விசா ஏற்பாடு.<br>மேலதிக விபரங்களுக்கு : www.sikaram.lk/workvisa |

(ஜ-344)

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

FREE Assessment
info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு சுயவிபரக்கோவையை அனுப்பி உங்களுக்குப் பொருத்தமான நாடு, விசா எது என அறிந்துகொள்ளுங்கள்

**Sikaram (Pvt) Ltd.** 275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 0011
முற்பதிவு அவசியம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org